# எழுத்தாணி

பல்சுவை இதழ்

ஜீன் இதழ்-06 2012



## முற்றத்துக் கண்ணாடி முகங்காட்டத் துடிக்குது.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# Media Resources and Training Centre (MRTC), University Of Jaffna,Sri Lanka



In Tamil media climate, It is an exciting time of change and opportunity. A Media Study programme specifically attuned to this new media landscape offering a blend of media production skills, digital tools, creativity is required

MRTC diploma course places diploma holders in the starting blocks of a broad range of media production careers with a wide knowledge base and some specific skill sets.

In preparation for an industry in which job and skills boundaries are now converging, technical/production skills, team and communication skills, a creative outlook and an understanding of contemporary media practice and business model is the need of the hour.
MRTC Professional diploma programme develops students who can adapt to changes in this fast moving and constantly evolving media environment.

Our students have been working on lab journal, video journal and online journal during their study and have gone on to work in a range of media occupations.

The Tamil medium Journalism programme offered by MRTC is the first of its kind in the country. The courses we offering are of exceptional quality and meet the demands of the media and creative industries for talented and highly skilled diploma holders.

MRTC has productive working relationships with media industry partners, including regional, national and international media

Teaching is led by experienced industry practitioners and highly qualified tutors who guide students towards a critical and historical understanding of print, radio, television, film and new media cultures.



T.Thevananth, M.A,M.Sc.
Director,
Media Resources and Training centre
University of Jaffna

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

# எழுத்தாணி

இதழ் – 06

யாழ் பல்கலைக்கழக ஊடகவளங்கள்
மற்றும் பயிற்சி மைய
மாணவர்களின் பயிற்சி இதழ்

**ஆசிரியர் குழுவினர்**
ப.இஸ்வரியா
ப.புவிதா
பா.அனோஜா
ஜெ.ஜெகன்

**நிர்வாக ஆசிரியர்**
தே. தேவானந்த்

**ஆலோசனை**
அ.சபேஸ்வரன்

**பக்க வடிவமைப்பாளர்கள்**
ப.இஸ்வரியா
ப.புவிதா
பா.அனோஜா

**ஆக்கங்கள்**
ப.இஸ்வரியா
ப.புவிதா
பா.அனோஜா
ஜெ.ஜெகன்

**வெளியீடு**
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

தொடர்புகளுக்கு
யாழ்ப்பாண பல்கலைக்கழக
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம். (MRTC)
84, ஜிம்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0212229873
Email: directormrtc@gmail.com

# உள்ளே...

| | பக்கங்கள் |
|---|---|
| 1. கரையவலைக் கல்வியுள்ள கவலைகள் | 01–03 |
| 2. ஓடக்கரை அப்பமாம் ஓடிவரும் கூட்டம் | 03–05 |
| 3. அகதிகள் தமிழ் இனமா? | 05–06 |
| 4. மனிதனே நீ மண்ணோடு இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய் | 06–09 |
| 5. கூத்திலே ஆட்டம் குறைந்து போகின்றது | 09–11 |
| 6. பாதாளம் வரை பாய்ந்து நிற்கும் இலஞ்சமும் ஊழலும் | 11–13 |
| 7. நாட்டைக் கூத்தின் காவலனுடனான நேர்காணல் | 13–16 |
| 9. கற்கை நகரில் கலைக்கு பெயர் போன கலைஞன் | 16–19 |
| 10. நாடக விறு விறுப்பின் சுறு சுறுப்பான அனுபவம் | 19–21 |
| 11. தைரியமில்லா உள்ளங்களின் முட்டாள் தனமான முடிவு | 21–23 |
| 14. முற்றத்துக் கண்ணாடி முகங் காட்டத் துடிக்குது | 23–25 |
| 15. பராமரிப்பு எப்போது? | 25–27 |
| 15. நீரின்றி அமையாது உலகு , குருதியின்றி அசையாது உயிர் | 27–28 |




வடமராட்சி மக்களின் வாழ்வாதார தொழில்களில் ஒன்றாக விளங்கும் மீன்பிடியானது மூன்று தசாப்த காலங்களுக்கு முன்னர் தன்னிறைவு பெற்ற தொழிலாக காணப்பட்டது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடக்கூடிய விற்பன்னர்கள் பலர் இப் பகுதியிலேயே வாழ்ந்தனர். மீன்பிடியில் கைதேர்ந்தவர்களான இவர்களது உற்பத்திகள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மட்டும் அல்லாது இந்தியாவிற்க்கும் அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டது. இவர்கள் தமது கடல் வளத்தை பாதுகாக்கும் முறையிலும் பல நுட்பங்களை கையாண்டு தமது தொழிலை நடாத்தினார்கள். இவ் நுட்பத்தை பயன்படுத்தியே ஏனைய பகுதி மக்களும் தமது தொழிலை நடாத்தி வந்தார்கள்.

இந் நிலையானது முப்பது வருட கால யுத்தத்தினால் பல பின்னடைவுகளை சந்தித்திருந்தது. இவர்கள் தமது வாழ்வாதாரங்களையும் உடமைகளையும் விட்டு பல இடப்பெயர்வுகளை எதிர் கொண்டார்கள். பாதுகாப்பு தடைச் சட்டங்களினால் ஆழ்கடல் மீன்பிடியாது தடை செய்யப்பட்டது. ஏ9 பாதை மூடப்பட்டதால் உற்பத்திகளின் ஏற்றுமதியில் தடையேற்பட்டு சந்தை விற்பனையிலும் பல சவால்களை எதிர்கொண்டிருந்தனர்.

தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் மீளவும் தமது பகுதிகளில் மீள்குடியேறியுள்ள இவர்கள் தமக்கு கிடைத்த வாழ்வாதார உதவிகளையும் கடன்களையும் கொண்டு சிறிதளவான மீன்பிடி சாதனங்களை வாங்கி மீளவும் தமது தொழிலை ஆரம்பித்தார்கள்.

இந் நிலையில் இப் பகுதியில் இந்திய மீனவர்களின் ஆதிக்கத்தால இவர்கள் தமது பொருளாதார ரீதியாக பலமான பின்னடைவை எதிர்கொண்டுள்ளார்கள். அது மட்டுமல்லாது இவர்கள் மீன்பிடித்து வரும் சிறிய ரக உபகரணங்கள் பலவும் சேதமாக்கப்பட்டு வருகின்றது.

இதுபற்றி மருதங்கேணி பகுதியைச் சேர்ந்த மீனவரான எஸ்.குணசிங்கம் குறிப்பிடுகையில், "கைக்கு வந்தது வாய்க்கு எட்டாது என்பது போல் நாங்கள் வலை போட்டுவிட்டு வந்து மீளவும் மாலையில் சென்று பார்த்தால் வலை இருந்த இடமே இல்லாமல் இருக்கு. இந்திய மீனவர்கள் எங்கட பகுதியில் வந்து மீன் பிடித்து விட்டு போறது மட்டுமில்லாது எங்கட வலைகளையுமே நாசம் பண்ணி விட்டு போறதால் பிறகு சென்று மீன்பிடிக்கவே எங்களுக்கு வலை இல்லாமல் இருக்கு" என்று தன்னுடைய துயரத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

இது தவிர இவர்கள் இதுவரை காலமும் தவிர்த்து வந்த தங்கூசிகள் றோளர் படகுகள் என்பவற்றை பயன்படுத்தி இவர்கள் தமது மீன்பிடியை மேற்கொள்வதால் எமது கடல்



வளமும் இவர்களது சிறிய ரக வலைகளும் அழிவடைகின்றது.


இங்கு இவர்களது மீன்பிடி உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள அதேவேளை அன்னிய தேசத்தவர்கள் இக் கடற்பரப்பிலான அத்துமீறி கடல்வளத்தையும் சொத்துகளையும் சூறையாடி வருவதனால் இவர்கள் யுத்த காலத்தில் ஏற்பட்ட பின்னடைவை இன்று அதிகளவான பின்னடைவை எதிர்கொண்டுள்ளார்கள்.

இவர்களது இப் பிரச்சனை தொடர்பாக அதிகாரிகள் மட்டத்திலும் இரு நாட்டு மீனவ பிரதிநிதிகள் மட்டத்திலும் பல சந்திப்புகள் இடம்பெற்ற போதும் இப் பிரச்சனைக்கு இதுவரை தீர்க்கமான முடிவு எவையும் எட்டப்படவில்லை.தற்போதே ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி கொடுக்கப்பட்ட போதும் போதிய உபகரணம் இன்மை நாட்டில் ஏற்பட்டுள்ள பெற்றோலி விலையேற்றம் இந்திய மீனவர்களது நாட்டம் என்பவற்றால்.இவர்கள் ஆழ்கடல் மீன்பிடிக்கு முகங் கொடுக்க முடியாதே உள்ளார்கள்.

இந் நிலை மாற்றப்பட வேண்டுமாயின் அரச அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவ வேண்டிய அதே வேளை வறிய மீனவர்கள் தனிப்பட்ட ரீதியில கவனிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு உதவிகள் வளங்கப்படுகின்ற அதேவேளை இவர்களது தொழில் சார் உரிமைகள் பாதுகாக்கப் பட்டு இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளுக்கு முழுமையான ரீதியில் ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும். இதன் மூலமே எம்மிடம் இருந்து அழிவடைந்த வாழ்வாதாரத்தை மீள்கட்டுமானம் செய்யவும் எமது கடல்வளத்தை நாம் பாதுகாக்கவும் முடியும்.



ப.ஐஸ்வர்யா



யாழ்ப்பாணத்திலிருந்து வடகிழக்காக ஏறத்தாழ 33 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் நகரமே பருத்தித்துறையாகும். ஆரம்ப காலத்தில் இது பருத்தி உற்பத்திகளின் மையமாக இருந்ததினால் இது காலப்போக்கில் அப்பெயர் கொண்டு காரணப்பெயராக இன்னும் பருத்தித்துறையென்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. இது பருத்திகளுக்கு மட்டும் பெயர்பெற்றதன்று. வடை, அப்பம் போன்ற தின் பண்டங்களுக்கும் பெயர் பெற்று விளங்குகின்றது.

# ஓடக்கரை அப்பமாம்! ஓடி வரும் கூட்டமாம்





பா.அனோஜா

யாழ்ப்பாணத்திலிருந்து எப்பாகத்திலும் இருப்போரிடம் வெளிநாட்டவர்கள் இவர்களிடம் தொலைபேசி வாயிலாகவும் கடித வாயிலாகவும் நேரடியாகவும் எங்களுக்கு பருத்தித்துறை வடை அனுப்புங்கோ நாங்கள் உங்கள் ஊருக்கு வந்து அப்பமும் வடையும் கட்டிக்கொண்டும் போனால் தான் எங்களுக்கு மனநிறைவாக இருக்கும் என்று எத்தனையோ வெளிநாட்டு நபர்கள் வாய்விட்டு சொல்லியும் கேட்டு வாங்கியதையும் ஓர் கணம் மனம் எண்ணத்தொடங்கியது.


கணிப்பீட்டுக்கு இதுதான் தலைப்பு என்ற வெறியுடன் பருத்தித்துறை ஓடக்கரைக் கிராமத்திற்குள் நுழைகின்றேன். வீதியின் இருமருங்கிலும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஆட்டோ என்று வாகனங்கள் வரிசையில் நிற்க ஏதோ ஒரு கூட்டம் 1 அடி அகலம்,1 அடி நீளமுள்ள ஒரு பெட்டிக்குள் இருந்த அம்மாவிடம் பணத்தைக் கொடுத்து அப்பத்தைப்பெற்றுக்கொண்டார்கள். இது தான் அந்த அம்மாவின் அப்பக்கடையின் தோற்றம். இக்காட்சி சிறுகதையாய் சிறுத்து விடுமென்று கைகட்டி வாய்பிளக்க, கையில் எழுதுகோலுடனும் வெற்றுத்தாளிடமும் நிற்கின்றேன். அது எங்கே சிறுகதையானது, தொடர்கதையாகவே தொடர்ந்தது. நேரம் செல்லச்செல்ல என் பொறுமையும் முதிர்ந்தது. குறுக்கிட்டு நான் வந்ததை கிறுக்கலாம் என்று அந்த அம்மாவை நெருக்கிய போது அருகில் இருந்த வானொலியிலிருந்து "பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்" என்ற வாக்கியம் என் செவிப்பறையில் ஒலிக்கத்தவறவில்லை.

மழைவிட்டுத் தூவானம் ஓயவில்லை மாதிரி அப்பமும் கட்டு வந்தோரும் வாங்கிச் சென்றும் செல்லத்துரை பாக்கியத்தை (வயது 62) நான் விடுவதாய் இல்லை அவரிடம் இது தொடர்பாக கேட்ட போது ..... ஒரு பலத்த பெருமூச்சு விட்டபடி சற்று மௌனித்தார். இவ்மௌனத்தில் கடந்த கால நினைவுகள் மட்டும் தேங்கி நிற்கின்றன. என்று மட்டும் எனக்குப்புரிந்து. நான் இதனை ஊகித்த பிற்பாடு அத்தாயின் வாயி லிருந்து பின்வரும் சொற்கள் புறப்பட்டு நின்றது.



இந்தப்பகுதி 50-80 வருடங்களுக்கு முன்பு பெண்களையே தலைவர்களாகக்கொண்டு இயங்கி வந்த குடும்பங்களில் பெண்களே உழைத்துக் குடும்பத்தைக்காக்க வேண்டிய பொறுப்பில் இருந்தார்கள்.

இக்குடும்பங்களில் உள்ள ஆண்கள் (குடும்பத்தலைவர்கள்) இறந்ததினால் மனைவிகள் தமது பிள்ளைகளையும் குடும்பத்தையும் கொண்டு இழுக்க வேண்டிய கட்டாய தேவையிருந்தது. அத்தோடு ஆண்கள் இருக்கும் குடும்பத்தில் அவர்கள் உழைக்கும் பணம் குடிபோதைக்குப்பயன்படுத்தி குடும்பத்தை ஏனோ தானோ என்ற போக்கில் கவனித்த நிலையில் பெண்கள் கட்டாயம் ஏதோ ஒரு தொழிலைப் பழகவேண்டி தேவையிருந்து அதனால் தான் இப்பிரதேசத்தில் இருந்து பெண்கள் உழைக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு அப்பம் சுடவதை பழகினா். இன்று இப்பிரதேச பெண்மணிகள் சுடும் அப்பத்திற்க்கு நிகராகாது. இதனால்த்தான் நான்கு மணி ஆனதும் சிறியவர் முதல் பெரியவர் வரை அப்பத்திற்க்காக காத்திருந்து வாங்கி செல்கின்றார்கள் என்று தனது அப்பச்சட்டியை கட்டிக்காட்டி தங்கைச்சி சற்று நில்லும்மா என்று ஒரு சோடி அப்பத்தை உற்றுப்பார்க்க விட்டு அத்தாயின் விழிகள் ஈரமாயின. தனது விழிகளில் வழிந்த கண்ணீர் துளிகள் கன்னத்தினூடாக நெருப்பு தணலிலே விழுந்து காய்ந்தது. இந்த அப்பம் கரையிலே கருகி நடுவில் பாலாகவும் சர்க்கரையாகவும் இருப்பது போலவே தமிழர்களின் வாழ்வும் சொகுசை வழமாக்கிக்கொண்டு சிறுபான்மையினரை ஒடுக்கி தங்களை பெரும்பான்மையினரென்று நடுவிலே இருக்கும் பால் அப்பமாகக் காட்டிக்கொண்டு தமிழனை கரை அப்பமாகக்கருதும் சிங்களவனுக்கு நான் எனது




அப்பச்சட்டையின் நிலையை இலங்கைக்கு ஒப்பிடுகின்றேன் என்று கைகளைக்குவித்து வழியனுப்பி வைத்தாள்.

ஆதங்கத்துடன் ஆழமான அர்த்தங்களை அடுக்கிய அத்தாயின் கண்ணீரிலிருந்து விடுபடாத நான் இதுவும் அப்பக்கடை தானே? என்று அருகில் நின்ற நவரட்ணம் ரஜனி (வயது 46) அவர்களிடம் விசாரித்து இது தொடர்பாக கேட்டேன். அதற்கு அப்பெண் நாங்கள் இங்கு சுடும் அப்பம் எங்கட பரம்பரைத்தொழில் இது கிட்டத்தட்ட 70 வருடங்களுக்கு மேலாக செய்து வரும் ஒன்று. முன்னர் அப்பம் சுடுவோரின் வீதம் அதிகம் ஆனால் இன்று அப்பம் சுடுகின்றவர்களின் பிள்ளைகளில் 40 வீதமானோர் வெளிநாடுகளில் உள்ளார்கள் இதனால் அவர்கள் தனது பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் இத்தொழிலினைச் செய்ய வேண்டாம் என்று கட்டளை போடுகின்றார்கள். இதன் காரணமாக இன்று விரல்விட்டுச் சொல்லக்கூடிய நான்கு பெயர்களே அப்பத்தொழிலினை வாடிக்கையாளர்களுக்குச் செய்து வருகின்றார்கள்.



இதனால் இன்று அப்பம் வாங்குவோர் அதிகமாகவும், சுடுவோர் குறைவாகவும் உள்ளனர். அப்பத்தில் வெள்ளை அப்பம், பால் அப்பம், தெளிச்சுச்சுடும் அப்பம், கலக்கிச்சுடும் அப்பம், முட்டை அப்பம் என ஐந்து வகையான அப்பங்கள் உள்ளன. அதில் வெள்ளையப்பம் ஒரு சோடி 12 ரூபாவும்,பால்அப்பம் ஒரு சோடி 30 ரூபாவும், தெளிச்சுச் அப்பம் ஒரு சோடி 12 ரூபாவும், கலக்கிச்சுடும் அப்பம் 12 ரூபாவுமாக விற்கப்படுகின்றன. இந்த விலைகள் நியாயமான விலையாகவும் எல்லோருக்கும் எளிதில் வாங்கிக் கூடியவையாகவும் உள்ளன. தெளிச்சுச்சுடும் அப்பமும், கலக்கிச்சுடும் அப்பமும் முட்டை போட்டு சுடும் அப்பங்களாகும் என கூறினாள்.

பட்டுக்குப்பெயர் போனது காஞ்சிபுரம் அல்வாக்குப் பெயர்போனது திருநெல்வேலி மழைக்குப்பெயர் போனது சிராப்புராஞ்சி வடைக்குப் பெயர் போனது பருத்தித் துறை. அப்பத்திற்குப்பெயர் போனது ஒடக்கரையென்றால் அது மிகையாகாது.



# அகதிகள் தமிழ் இனமா?

அகதிகள் என்ற சொல்லை பெரும்பாலானோர் தமது உதடுக ளில் உச்சரித்திருப்பார்கள். ஆனால் அவர்கள் யார்? அவ்வா றான ஓர் பகுதியினர் தோன்றுவதற்கான காரணம் என்ன என்று சிந்தித்தே இருக்கமாட்டார்கள். அவ்வாறு யோசித்திருந்தால் அகதிகளின் எண்ணிக்கை மில்லியன் கணக்காக உயர்ந்தி ருக்க சந்தர்ப்பமில்லை.அதேவேளை ஐ.நா 2001ம் ஆண்டு முதல் சர்வதேச அகதிகள் தினம் என்ற ஒன்றை உருவாக்கி யிருக்கவும் அவசிய மேற்பட்டிருக்காது.

அகதிகள் உருவாகுவதற்கு முக்கிய காரணங்களாக அமை வது இயற்கை அழிவுகள். போராட்டங்கள். மற்றும் மானுட நடத்தைகள் என்பன காரணமாய் அமைகின்றன. இவை உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வருவது புதிய விடயமல்ல. 1951ம் ஆண்டில்முதன் முதலில் அகதிகள் தினத்தை ஐ.நா அறிமுகப்படுத்தியது. அந்த வேளையில் ஆபிரிக்க நாடுகள் மட்டும் அத்தினத்தினை அனுஸ்டித்திருந்தன.

## எமது இலங்கைத் தீவுக்குள்ளே அகதிகளின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது?

இங்கு வடக்கு- கிழக்குப் பிரதேசம் தான் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற ஓர் பரப்பாக காணப்படுகின் றது. இதற்குள்ளே அகதிகள் கணிசமாக உருவாகுவதற்கு இயற்கை அழிவுகளை விடநடத்தப்பட்ட போராட்டங்கள் தான் காரணம் என்றால் அதனை யாரும் மறுக்க முடியாது.

30 வருட காலமாக நடைபெற்ற போராட்டம் ஓய்வுற்ற போ தும் இன்னும் சுமாராக 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமல் முகாம்களில் அகதிகளாக இலங்கை நாட்டுக்குள்ளே இருக்கின்றார்கள். இதை விட மேலும் 25 ஆயிரம் மக்கள் சொந்த வீடின்றி வாடகை வீடுகளில் வாழ்கின்றார்கள்.

போர் முடிவுற்று 3 வருடங்கள் கடந்த நிலையில் உள் நாட்டுக்குள்ளே 50 ஆயிரம் மக்கள் அகதியாக வாழ்கின் றனர் என்றால் மீள்குடியேற்றம். சமாதான சூழல் என்பதை எவ்வாறு நோக்கமுடியும்.

மக்கள் அகதிகளாக்கப்படுவதை தடுக்கும் நடவடிக்கை கள் பற்றி ஐநா விவாதித்துக் கொண்டிருக்கையிலேயே இலங்கையில் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகிய தமிழர்கள் தமது நிலங்களுக்காகவும் காணி களுக்காகவும் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தார் கள். அதே காலத்திலேயே வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் மக்களின் காணி நிலங்களை அபகரித்து அவர்களை அகதியாக்கும் நடவடிக்கை இலங்கைக்குள் இடம்பெற்றிருந்தது.

ஆட்சியாளர்கள் வாழ வழியின்றி தத்தளிக்கின்ற மக்க ளுக்கு உதவுவதும் காணி நிலங்களை பெற்றுக் கொடுத் து முகாம்களை இல்லாமல் அழித்து. அகதிகளை ஒழிப் பதும் அரசுகளின் கடமை.

இலங்கையினை விட்டு பல்வேறுபட்ட காரணங்களுக் காக அதிகமான தமிழர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந் துள்ளனர். அவர்களையும் அந்நாடுகள் திருப்பி இலங்கை க்கு அனுப்பினால் அம்மக்களின் நிலைமையை ஒரு கணம் யோசித்துப் பாருங்கள்! இலங்கையில் காணிநில அபகரிப்பானது உச்சக் கட்டத்தை அடைந்துள்ள வேளையில். தமிழர்களை திருப்பி அனுப்பினால் வாழ்வது எங்கு தான்?

அயல் நாடான இந்தியாவிலும் 132 அகதி முகாம்களில் 80 ஆயிரம் இலங்கை அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். தமிழ் மக்கள்தான் 54 நாடுகளில் அகதி வாழ்வை வாழ் கின்றனர். இவ்வாறு வாழ வேண்டும் என்பது தமிழ் இனத்தின் விதியா? இம்மக்களை அகதி நிலைமைக்கு கொண்டு வந்தவர்களிடமிருந்து மீட்பதற்கு மீட்பர் வர மாட்டாரா? என மக்கள் ஏங்குகின்ற அதே நேரம். இன்னொரு சாரார் எங்களின் உரிமையான மண்ணில் வாழ விட்டாலும் பரவாயில்லை அகதி எனும் பட்டமில் லாமல் இறுதியில் சாகமாட்டோமா? என தவிக்கின்றனர். என்று தீரும் இந்த அகதி வாழ்வின் சோகம்?



# மனிதனே நீ மண்ணோடு இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்.

ஆனைமுதல் ஈயெறும்பு வரை யாவரிற்கும் பொதுவானது மரணம் ஒன்றுதான். இவ்மரணம் ஆறிலும் வரும் நூறிலும் வரும் இத்தகைய இந்தச் சாவு சிலரை மீளாத்துயரிலே வேக வைக்கிறது. இன்னும் சிலரை மௌனிக்க வைக்கிறது. இந்நிலையில்த்தான உலகக் கத்தோலிக்கத் திருச்சபையானது இறந்தவர்களை நினைவுபடுத்துவதற்காகவும் அவர்களுக்காகச் செபிப்பதற்காகவும் கார்த்திகை மாதத்தினை விசேட விதமாக ஒதுக்கியுள்ளது.




அதனால் கார்த்திகை 2ஆம் திகதி கத்தோலிக்கர்கள் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள சேமக்காலையிலே மீளாத் துயில் கொள்ளும் ஆத்துமாக்கள் சாந்தியடைய வேண்டும் என்பதற்காக கல்லறைகளில் திருப்பலியினை ஒப்புக் கொடுக்கின்றனர். அதன் போது உற்றார் உறவினர்கள் தமது கண்ணீரையும், பூக்களையும் காணிக்கையாக்கிக் கொள்கின்றனர்.

மனிதனின் வாழ்க்கை வட்டத்தில் எத்தனையோ பேர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வளர்ச்சிக்காய் எம்மைத் தாங்கிய தூண்களாக இருப்பார்கள். ஆனால் இன்று இவர்கள் கல்லறைகளிலேயே துயிலலாம். இவர்களுக்காக நாமும் சேர்ந்து கல்லறையிலே மீளாத்துயர் கொள்ள முடியாது. மாறாக அவர்களுக்காகச் செபிக்கவே முடியும்.


இன்று எத்தனையோ இறந்த உடல்கள் அடையாளம் காட்ட முடியாத நிலையிலே அங்கொன்றும்,இங்கொன்றுமாக வீசப்பட்டதை நாம் அறிவோம்.

இன்னும் வேதனையுடன் சொல்லப் போனால் இறுதியாக வன்னியில் நடந்த யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்கள் ஒன்றுக்கு மேலே ஒன்றாக எத்தனையோ உடல்களை அடுக்கி ஒரே குழியில் வீசப்பட்டதையும் உறவுகள் நினைக்க மறுத்தலில்லை. நாம் எப்போது சாவோம்? சாகும் போது நமக்கு என்ன நடக்கிறது? இவை ஆயிரக்கணக்கான ஆண்டுக ளாக மக்களுடைய மனதைக் குடைந்து கொண்டிருக்கும் மிக முக்கியமான கேள்விகள்.

நாம் யாராக இருந்தா லும் சரி, எங்கு வாழ்ந்தாலும் சரி இவற்றிற்கான பதில்களைத் தெரிந்து கொள்ளவே விரும்புகிறோம்.

நமக்குப்பிரியமானவர்கள் யாராவது சாகும் போது நாம் மனம் விட்டு அழுகின்றோம். அவர்கள் இப்போது என்ன நிலையில் இருக்கிறார்கள்? வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களா? அவர்களுக்கு நாம் உதவ முடியுமா? மறுபடியும் நாம் அவர்களைப் பார்ப்போமா? போன்ற கேள்விகளை எம்மில் பலர் எழுப்புவதுண்டு. இந்த கேள்விகளுக்கு உலக மதங்கள் வெவ்வேறு விதமான பதில்களை அளிக்கின்றன. நீங்கள் மண்ணுலகில் நன்மை செய்தால் பரலோகத்திற்குப் போவீர்கள் என்றும் தீமை செய்தால் நரகத்திற்கு போவீர்கள் என்றும். கத்தோலிக்கசமயம் கற்பிக்கின்றது. இறந்தவர்கள் தாங்கள் மூதாதையருடன் இருப்பதற்காக ஓர் ஆவி உலகிற்குப் போகிறது என்றும் இன்னும் சில மதங்கள் கற்பிக்கின்றன. வேறு சில மதங்களோ இறந்தவர்கள் நியாயத்தீர்ப்பு செய்யப்படுவதற்காகக் கீழுலகத்திற்குச் செல்கிறார்கள் அதன் பிறகு மறுபிறவி எடுக்கிறார்கள் என்றும் கற்பிக்கின்றன. நாம் அனுபவிக்கிற இந்த வாழ்க்கை ஒரு மெழுகுவர்த்தியின் சுடரைப் போன்றது. அந்தச் சுடர் அணைக்கப்படும் போது அது எங்கேயும் பிரிந்து போவதில்லை அது வெறுமனே இல்லாமல் போகிறது அவ்வளவுதான். அது போல்தான் மானிட உயிரும்.

மனிதர்கள் ஏன் சாகிறார்கள்? இதற்கான பதிலை நாம் ஆழமாக ஊடுருவிப் பார்த்தோம் என்றால் சிறப்பான பதில் கிடைக்கும். பூமியில் ஒரு ஆணும் பெண்ணும் மட்டுமே இருந்த சமயத்தின் போது என்ன நடந்ததென்பதை நாம் சிந்திக்க வேண்டும். பழைய ஏற்பாட்டின் ஆதியாகமம் இவ்வாறு விளக்குகிறது.



கடவுள் அனைத்தையும் படைத்து நல்லதெனக் கண்டவர் ஒரு நிபந்தனையை விதித்தார். ஆதாமிடம் கடவுள் இப்படிச் சொன்னார் 'நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் உண்ணலாம் ஆனால் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை உண்ணாதே அதை நீ உண்டால் சாவாய் என்றார். பாம்பின் மூலம் ஏவாளிடம் சாத்தான் இவ்வாறு' கேட்டான் 'நீங்கள் தோட்டத்திலுள்ள சகல கனியையும் உண்ண வேண்டாம் என்று கடவுள் சொன்னாரா? அதற்கு ஏவாள் நாங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவே இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து கடவுள் நீங்கள் சாகாத படிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்' என்றாள். நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை, தீமை அறிந்த தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்று கடவுள் அறிவார்' என சாத்தான் சொன்னான். சாத்தான் சொன்னதையெல்லாம் ஏவாள் நம்பினாள்.அதனால் அந்தக் கனியைப் பறித்து அதில் கொஞ்சத்தைச் சாப்பிட்டாள். பிறகு தன் கணவனுக்குக் கொடுத்தாள். அவனும் அதைச் சாப்பிட்டான். செய்யக்கூடாது என்று கடவுள் சொல்லியிருந்ததைத் தான் தெரிந்தே செய்தார்கள். அவர்களின் நிலையைக் கண்ட கடவுள் பெண்ணிற்கு சாபமாக மகப்பேற்று வேதனையும், ஆணுக்குச் சாபமாக நெற்றிவியர்வை நிலத்தில் சிந்தி உழைக்கவும் இருவருக்கும் கடவுள் இறுதியாக 'நீ மண்ணாய் அருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்' என்றார். இவற்றினாலேயே மனிதன் இறக்கும் நிலையைப் பெற்றான்.

இறந்தோர் எப்படி உயிருடன் எழுப்பப்படுவார்கள்? எத்தகைய உடலோடு வருவார்கள்? என ஒருவர் கேட்கலாம். நாம் விதைக்கும் விதை மண்ணில் மடிந்தாலொழிய உயிர் பெறாது. முளைத்த பயிராக நாம் அதை விதைக்கவில்லை. மாறாக வெறும் கோதுமை மணியையோ மற்றெந்த விதையையோ தான் விதைக்கிறோம.ஆனால் கடவுளோ தம் விருப்பப்படி அதற்கு ஓர் உருவைக் கொடுக்கிறார். ஒவ்வொரு விதைக்கும் அதற்குரிய உருவைக் கொடுக்கிறார். பறவைக்கு வேறொரு வகையான ஊனும், மீன்களுக்கு மற்றொரு வகையான ஊனும் உள்ளன.விண்ணைச் சார்ந்தவர்களுக்கு ஒரு வகையான உருவமும், மண்ணைச்சார்ந்தவர்களுக்கு இன்னொரு வகையான உருவமும் உண்டு. விண்ணைச் சார்ந்தவற்றின் அழகு வேறு, மண்ணைச் சார்ந்தவற்றின் அழகு வேறு. கதிரவனின் சுடர் ஒன்று, நிலவின் சுடர் இன்னொன்று, விண்மீன்கள் சுடர் இன்னொன்று, விண்மீனுக்கு விண்மீன் சுடர் வேறுபடுகிறது. இறந்தோர் உயிர்த்தெழும் போதும் இவ்வாறே இருக்கும் அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர் பெற்று எழுகிறது. வலுவற்றதாய் விதைக்கப்படுவது வல்லமையுள்ளதாய் உயிர் பெற்று எழுகிறது. நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனித கையால் கட்டப்படாதது. நிலையானது என்பது நமக்குத் தெரியும். ஆக ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவர்களுக்குக் கிடைக்கும் பயன் என்ன?என்பதே முடிவாகிறது.



மரணம் என்பது அனைத்து மனிதர்களின் மனதையும் குடைந்து கொள்ளுகின்ற ஓர் மறைபொருள். மனித வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் கலந்திருப்பினும் இன்பத்தையே நாம் அதிகம் விரும்புகின்றோம். இதனால் தான். இழப்பு என்பது எம்மை வாட்டிக் கொள்கின்றது. 1981 ஆம் ஆண்டுக்கு முன்னர் மரணம் பற்றி மூன்று வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டன. அதில் 1960 களில் இதயம் மற்றும் நுரையீரலானது மீளமுடியாது செயலிழத்தல் மரணமாகும் என்ற பாரம்பரியக் கருதுகோளையும். இரண்டாவதாக மூளையத்தை உறுதிப்படுத்துவதற்கான தூண்டல், துலங்கலின்மை கண்மணி வெளிச்சத்திற்கு தாக்கம் அடையாது விரிவடைந்த நிலையில் இருத்தல் அல்லது சுவாசமற்ற நிலையே மரணம் என்கிறது இரண்டாவது வரைவிலக்கணம்.

எனினும் இவ் எடுகோளிற்கு அப்பால் புதிய வரைவிலக்கணமானது 1981இல் பின்வருமாறு கூட்டி நிற்கின்றது. மீள முடியாத வகையில் சுற்றோட்டமும் சுவாசமும் நிறுத்தப்படுதல் அல்லது மீள முடியாத வகையில் முழு மூளையும் மூளைத்தண்டும் செயலிழத்தலாகும்.






இன்று உலகளாவிய ரீதியில் மரணத்தை பல வாறு தழுவிக் கொள்கின்றனர். மரணத்தைத் தழு வியவர்களில் 25 வீதமானோர் வலிக்கான சிகிச் சைகளைப் பெறாது துன்பப்பட்டே மரணிக்கின் றனர். 50 வீதமானோர் பாதியளவில் மனரீதியான ஆதரவு கிடைக்காமல் உள்நெருக்கீட்டுக்கு ஆளாகி மன அமைதியின்றி இறக்கிறார்கள். எல் லாவற்றிற்கும் மேலாக 21 வீதமானவர்கள் மரணத் தின் போது உரிய பண்பு மரியாதையுடன் நடத்தப் படுவதில்லை. ஒருவர் இறந்தால் வைத்தியர் உறு திப்படுத்தும் வரை அவரை இறந்தவர் என்ற பட்டி யலில் இணைத்து விட முடியாது. இறந்தவர் மட்டில் இறப்பின் பின்னான பொறுப்புக்கள் இருக்கின்றன இவையெல்லாம் செய்யப்படுகின்றனவா? என்று கேட்டால் மிகவும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. இறப்பை உறுதி செய்ய வைத்தியர் தமக்குரிய பகுதியை நிரப்பி கையொப்பம் இட வேண்டும். இறப்பு சம்பந்தமான விபரம்.



சொத்துக்கு ஒடி அலைவதை விடுத்து ஒரு சாண்வயிரை நிரப்பத் துடித்தும் நிரப்பாத பல மனிதர்களுக்கு உதவி செய்து ' அவன் இருந்தான் பலருக்கு நன்மை செய்தான் அவனல்லோ பிறவி' என்று இறந்த பின்பு அவனின் புகழை மற்றவர்கள் பறை சாற்றும் வண்ணம் வாழ்ந்து கடவுள் அழைக்கும் போது நித்திய வாழ்விற்கு நித்திரை கொள்ளச் செல்வோம். அது வரைக்கும் இறந்த சகல ஆத்துமாக் களுக்காகவும் மலர் தூபி திபச்சுடர் ஏற்றி அவர்களுக்காக உருக்கமாகச் செபிப்போம்.



ஜெ. ஜெகன்

# கூத்தில் ஆட்டம் குறைந்து போகின்றது



கலைகள் மனிதனை மகிழ்விப்பதோடு நின்று விடாது ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் காலங்களையும் வெளிப்படுத்தும் ஊடகமாகத் திகழ்கின்றது. எத்தனை மொழிகள் இருந்த போதிலும் மொழியைப் பயன்படுத்தி மனிதனின் உள்ளத்தில் உள்ள எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்த முடியாத நிலையில் ஒவ்வொரு மனிதர்களும் தள்ளப்பட்டு உள்ளார்கள். பாரம்பரியக் கலைகள் ஒரு நாட்டில் பண்பாட்டின் அடிக்கல்லாக விளங்குகின்றது. ஆனால் இன்று இந்த மரபுக்கலைகள் கால வெள்ளத்தின் பெருக்கினால் அடித்துச் செல்லப்படும் கவலைக்கிடமான நிலை இன்று காணப்படுகின்றது. சத்தியமே வாழ்வு என வாழ்ந்தோரின் சிறப்பினையும், தீய வாழ்வே தாரகமந்திரம் என்று வாழ்ந்தோர் இழிவினையும் பிஞ்சு பாலகன் முதல்பஞ்செள நரைத்த கிழவன்-கிழவி வரை யாவருக்கும் தெளிவான விளக்கத்தினை நாடகப் பாத்திரங்களின் ஊடாக வெளிப்படுத்தும் வல்லமை நாடகத்திற்கே உண்டு.

இன்று இந்த நாடகங்களையும், கூத்துகளையும் வளர்க்குமநோக்கில் தமிழ்த்தினப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன ஆனாலஇப் போட்டிகள் ஆசிரியர்களினாலும், நெறியாளர்களினாலும் நெறிப்படுத்தாமல் பங்கு பற்ற வேண்டும் என்ற கட்டாயப் பெயரில பல பாடசாலைகள் மேடைக்கு வருவது தெரிகின்றது. இது காலப்போக்கில் மரபு ரீதியாகப் பேணப்பட்டு வந்த புராணங்கள் வரலாறுகளையும் மாற்றிவிடுமோ என்ற அச்சத்தை தோற்றி விடுகிறதுபாடசாலைகளுக்கிடையிலே நடாத்தப்படும் தமிழ்த்தினப் போட்டிகளுக்கு நடுவராகப் பணியாற்றிவரும் திரைப்பட இயக்குனரும், கலைப்பகுதி விருபெற்றவருமான இப்படிபலகலைமுகங்களைக் கொண்ட அண்ணாவியார் சச்சிதானந்திடம்தமிழ்த்தினப் போட்டி பற்றி கேட்ட போது ஒரு நீண்ட பெரு மூச்சுடன் கூற ஆரம்பித்தார்.



தமிழர் பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் பேணவேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் தமிழ்த்தினப் போட்டிகள் மூலம் கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்குள் கொண்டு வந்தது பெரிய பேறாகும் இதனைச் சரியாக பாதுகாக்க வில்லை என்பதே என்னுடைய மன ஆதங்கம் என்றார். கழுமரம் என்றாலே என்னவென்று தெரியாமலேயே கூத்துக்கள் மேடைக்கு வருவது வேதனையே.கூறாக இருக்க வேண்டிய கழுமரம் இலைகளைக் கட்டிவேப்பமரம் போலவும் (மாரியம்மனுக்குரியசின்னம் )சிலுவை போலவும், பல கிளைகளைக் கொண்ட மரம் போலவும் இப்படி பலவடிவங்களுடன் காட்சியளிக்கின்றன இதனைப்பழக்கும் ஆசிரியரோ அண்ணாவியாரோ, நெறியாளரோ, புராணங்களையோ, வரலாறுகளையோ படிக்கவில்லை ...ற சந்தேகத்தை எழவைத்து விடுகின்றது.

அண்ணளவாக 32-33 வரையான கதாபாத்திரங்களையும் 40-50வரையான ஏற்ற இறக்கம் தவிர்ந்த மெட்டுக்களைக் கொண்ட காத்தவராஜன் கூத்து ஒன்று அல்லது பயன்படுத்தி காத்தவராயன் கூத்தை நிறைவு செய்வது வேதனையே எந்தப்பாடல்கள் எந்தப் பாத்திரத்தின் தன்மைக்குப் பொருத்தமானது என்பதை நெறியாளர்கள் கவனிக்க வேண்டும.அல்லது துறுதமான மெட்டுக்களில பாடிய பாடல்களின் உணர்வைக் கொன்று விடும் ஆகவே பாத்திரங்களின் தன்மைக்கும் குணாதிசயத்திற்கும் ஏற்ப மெட்டுக்கள் அமைக்கும் போது காத்தவராயன் கூத்தின் பாரம்பரியத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இது தவிர்ந்த காவியமெட்டு, தெம்பாங்கு மெட்டுக்கள், சினிமா மெட்டுக்கள் கலந்து வருவது பாரம்பரியத்தைக் கொல்வது போல் இருக்கிறது இது இன்றைய மேடை நாடங்களில் தாராளமாகப் பாவிக்கப்படுகின்றது. போட்டி நாடகங்களில் சிந்து நடைக்கூத்தின் ஆளிவோரான இராகங்களை தவிர்ப்பது மோசமானதாகம்.

கதை தழுவி வரும் ஆட்டமே கூத்து. ஆட்டம் இல்லையேல் கூத்தில்லை எனவே சிந்து நடைக்கு துள்ளல் ஆட்டம் மிக முக்கியமானதொன்றாகும்.

இந்த ஆடல் பாடல்களின் உணர்வை உள்வாங்கி வெளிப்படுத்தும் தாளக்கட்டை கால்கள் உள்வாங்கி தாளம் ரசகாது வெளிப்படுத்துவையாக இருக்க வேண்டும் அல்லது பாடலுக்குப் பொருத்தமில்லாத உணர்வுகளை மிஞ்சிய ஆடல்கள் விரும்பத்தக்கது. கழுமரத்தை முன்னர் கூறியது போல எழினிகளைப்பற்றியும் கவனிக்க வேண்டியுள்ளது காட்சிக்குப்பொருத்தமான எழினிகளைப் பாவிக்கும் முறையை எடுத்துக்கொண்டால் மார்க்கமாகக் கட்டப்பட்ட மாளிகையிலும், சிம்மாசனத்திலும் கைலாயத்திலும் இருக்க வேண்டிய சிவபெருமான் வேறு இடங்களில் இருப்பதாக எண்ணி இவற்றினைப்பாவிப்பது எந்த வகையில் பொருத்தமானதாகும். பூங்காவன எழினி காட்சிப்படுத்தப்பட்டு இருந்த போதிலும் நடிகர்கள் அதை ஒரு தடவையேனும் பயன்படுத்தவில்லை அப்படியிருப்பதாய் அவர்கள் எண்ணவுமில்லை தேவையற்ற காட்சிகளுக்கு தேவையற்ற எழினிகளை பயன்படுத்துவதாலும் காட்சிப்படுத்தப்பட்ட எழினியைப்பயன்படுத்தாமல் இருப்பதனாலும் போட்டிகளில் புள்ளிகள் குறைவடைந்து



இதே போன்று மேடைப்பொருட்கள் கைப்பொருட்கள் என்பனவற்றைச் சரியாகப் பாவிக்க நடிகர்கள் பயிற்றப்பட்டிருக்க வேண்டும். அந்தந்த இடத்தில் அந்தந்த பொருட்களை விட்டுச்செல்வதும், காட்சிகளுக்கு பொருத்தமற்ற மேடைப்பொருட்கள் மேடையில் இருப்பதும் மிகத்தவறே. இவைகளே நடுவரின் பார்வைக்கு புள்ளிகளைக் குறைப்பதற்கு காரணமாக இருக்கும் ஒவ்வொரு பாத்திரத்தினுடைய முக்கியமான கைப்பொருட்கள் அந்தந்த பாத்திரங்களிடம் இருக்கவேண்டும். குறிப்பாக சிவபெருமானிடம் சூலம், மன்னனிடம் வாள், முருகனிடம் வேல், போன்றவை முக்கியமானதாகும். இவைகள் இல்லாது போட்டிகளுக்கு வருதல் புள்ளிகளை இழக்க நேரிடுகின்றுஒவ்வொரு பாத்திரங்களையும் நடிக்கும் போது துணைப்பாத்திரங்களின் உணர்வை உள்வாங்கி வெளிப்படுத்தி நடிக்க வேண்டும

.இதுவில்லாமல் தமது உணர்வை வெளிப்படுத்தி மற்றைய பாத்திரங்களுக்கு உணர்வை வெளிக்காட்டாவிட்டால் நடிப்பின் உணர்விலிருந்து விடுபட்டதாகவே இருக்கும். காட்சிகளின் உணர்வுகளுக்கு நடிப்பு முகபாவனை இருக்கவேண்டும். உதாரணமாக கங்கை பெருக்கெடுத்து வரும் போது மாரியின் உணர்வு அதற்கேற்ற மாதிரி அமையவேண்டும்.இல்லையாயின் நடிப்பிலிருந்து விடுபட்டதான உணர்வையே ஏற்படுத்தும். பாடல்களின் தன்மைக்கு ஏற்ப (காதல், சோகம்,வீரம்) முகபாவனை அமைந்திருக்க வேண்டும். ஏனைய பாத்திரங்களும் தத்தமது பாத்திரத்திற்கு ஏற்ப மேடையைப் பயன்படுத்த வேண்டும். அண்ணளவாக 30 அடி உள்ள மேடையை முற்று முழுதாகப் பயன்படுத்தாமல்மூன்று அடி மேடையை மட்டும் பயன்படுத்தி நடிப்பது எப்படி நடிப்பாகும்.இசை தாள



சொல் மேலெழுவது மரபு இசையமைப்பாளர்கள் பாடல்கள் அல்லது வசனங்கள் போன்றவற்றிற்கு இசை வழங்கும் போது நடிகர்களின் பாடல்கள், வசனங்கள் பார்வையாளருக்குக்கேட்கும் பொருட்டு வெளிப்படுத்துவது முக்கியமானதாகும்.நடிகர்களும் இதனை உள்வாங்கி நடிக்க வேண்டும்பாடல்களுக்கு தாளம் முறியாமல் இசையானது பாவிக்க வேண்டும்பாடல்களின்வசனங்களின் இறுதி வரிகள் கூட தெளிவாகஇருக்கவேண்டும் என ஆதங்கத்தைக் கொட்டினார்.அவரின்ஆதங்கத்தைப் புரிந்து கொண்ட பிற்பாடு இவைகளை எவ்வாறுஐயா! சரிப்படுத்தலாம் என்றுதயக்கத்துடன் கேட்க. இதற்குப்பதில் சொல்வும் பல நிமிடங்கள்தயக்கத்தைக்காட்டினார் ஏன் என்றுபுரியவில்லை. இருந்தாலும் இறுதியாகத்தயக்கத்தடன் எ கதைக்க ஆரம்பித்தார்.நான் சொல்லும் விடயம் எந்தளவுக்கு சாத்தியப்படுமோ தெரியாது என்று தனது நிலைப்பாட்டைக்கூறினார்.கூத்துக்களைச்சுருக்கி பிரதியாக்கம் செய்யும் போது கூத்தினுடைய முழுமையும் பேணக்கூடிய மாதிரிகுறைக்க வேண்டும். கூத்துப்பாரம்பரிய மூலக்கரு மாற்றமில்லாது அமையவேண்டும். கூத்தின் பாரம்பரியம்,சரித்திரம், தெரிந்த ஆசிரியர்களினாலும், அண்ணாவியர்களினாலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு போட்டி நாடகங்களும் அளிக்கையின் பிற்பாடு உடனேயே நடுவர்களினால் குறை நிறைகளைச்சொல்லிச்செல்வது நன்று அதனால் அவர்கள் மேம்பட வழியுண்டு.


"குற்றம் என்னும் நிலப்பரப்பிற்கு வேலியாக அமைவது சட்டம். சட்டம் சாதனை படைத்து சாட்சியம் சொன்ன காலத்தை இன்று இலஞ்சம்-ஊழம் பறிமுதல் செய்துள்ளது."

தவிர்க்க முடியாத தீய விடயங்கள் பலசட்ட பூர்வமாகி விடுகின்ற காலமதில் இலஞ்சமும், ஊழலும் இன்று எல்லா சமுதாய அமைப்பிலும் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது. இலஞ்சம் கொடுத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற நிலை எல்லா துறைகளையும் ஆட்கொண்டுள்ளது. சாதாரண அடிமட்டத்தில் உள்ள ஊழியர்களில் இருந்து உயர் அதிகாரிகள் வரை எல்லோருமே. இலஞ்சமே வாழ்க்கையாய் வாழ்ந்து வருகின்றார்கள். இது தனித்த ஒரு நாட்டிற்க்குள் உள்ள கிணற்றுத் தவளைப் பிரச்சனையல்ல. சர்வதேச சமூகத்தையே மூழ்கடித்துள்ள பிரச்சனையாக மாறியுள்ளது.

இலஞ்சமும் ஊழலும் சமூகத்தில் செயற்படும் விதத்தினை சிறப்பான முறையில் சித்தரித்துக் காட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் இலஞ்சம் ஊழல் குறித்த தரப்படுத்தலில் டென்மார்க்,நியூசிலாந்து,சிங்கப்பூர், பின்லாந்து, சுவீடன், கனடா போன்ற 6 நாடுகளும் தரப்படுத்தலில் முன்நிலையில் இருக்கின்றன. ஆசிய நாடுகளில் சிங்கப்பூர் ஆனது 3ஆம் இடத்தில் காணப்படுவதும் குறிப்பித்தக்கது. இந் நாடுகள் எல்லாவற்றிலும் வாழ்க்கைத் தரமானது மிகவும் உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. லஞ்சமும் ஊழலும் வெறுமனே ஒழுக்கம் சார்ந்த பிரச்சினை மட்டுமன்று ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக மோசமான பாதிப்பை

# பாதாளம் வரை பாய்ந்து நிற்க்கும் இலஞ்சமும் ஊழலும்




மக்களுக்கு மிக நெருங்கிய கல்வித்துறை, மற்றும் காவல் துறைகளில் இலஞ்சமும் ஊழலும் மோசமாக தலைவிரித்தாடுகின்றன. இன்றும் கல்விச் சமூகமானது பின்னடைவான பாதையை நோக்கி நகர்வதற்க்கு இதுவே முக்கிய காரணமாக மாறியுள்ளது.சான்றிதழ் ஒன்றை பெறுவதற்கும் இலஞ்சமே கொடுத்து பெற்றுக் கொள்ள வேண்டிய சூழலாய் மாறியுள்ளது.

காவல்துறையில் காணப்படும் இலஞ்சம் ஊழல்களால் சட்டத்தை சரிவர செய்ய விடாதுள்ளதுடன் குற்றங்கள் அதிகரிக்கவும் குற்றம் புரிந்தோர் தண்டனையில் இருந்து இலகுவில் தப்பி விடவும் பல பாதாள உலகக் கும்பல்கள் உருவாகவும் வழிகோலிவிடுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலை திறக்கப்பட்டுள்ளமை குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பினையே காட்டி நிற்கின்றது.

ஏற்படுத்துகின்றது என்று முன்பு பல ஆய்வாளர் கள் கூறியிருந்தனர்.ஆனால் இன்று இத் தரப்படுத்தலானது இதற்குரிய எடுத்துக்காட்டாக கவே விளங்குகிறது.

இயற்கையை அழித்தல், சூழல் மாசடைதல், போதைவஸ்த்து பாவனை, வேலை வாய்ப்புக்கள, பதவி உயர்வுகள் போன்றவற்றின் பின்னணியில் எல்லாம் லஞ்சமும் ஊழலுமே மறைமுக சக்தியாக செயற்பட்டு வருகின்றது. தமிழ் திரைப்படங்கள் குறித்து மிக மோசமான விமர்சனங்கள் இருந்தாலும் சில திரைப்படங்கள்

வறுமையை ஒழித்து நிலையான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமெனின் ஊழலுக்கு எதிரான போராட்டத்தினாலேயே முடியும். ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக குவதற்கு பெரும் சுமையாக இருக்கும் லஞ்சம் ஊழல் என்பவற்றை ஒழிப்பதன் மூலமே வறுமை




ஊழலுக்கு எதிரான போராட்டத்தினாலேயே முடியும்.

இலஞ்சத்திற்க்கும் ஊழலிற்க்கும் எதிராகப் பல்வேறு முயற்ச்சிகள் எடுக்கப்படுகின்றன. இதில் முழுமையான மாற்றங்கள் எவையும் கிடைக்கப்பெறாவிடினும் இச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் இது அமையும்.

இன்று இந்தியாவில் மத்திய அரசுக்கு எதிராகப் காந்தியவாதி அன்னாஹசாரே எடுத்திருக்கும் ஊழலுக்கு எதிரான அமைதி வழி போராட்டமானது இன்று பல மட்டங்களிலும் உள்ள முக்கிய புள்ளிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. மேலும் பல முக்கிய பதிவிகளில் உள்ளவர்கள் சிறைச்சாலை நோக்கி அடியெத்து வைக்கத்தொடங்கியுள்ளார்கள்.


இலஞ்சத்திற்க்கும் ஊழலுக்கும் எதிராகப் பலமிக்க நடவடிக்கைகளை எடுக்காத எந்த ஒரு நாடும் முன்னேற்றம் அடைந்த நாடாக இருக்க முடியாது. இலங்கையானது இலஞ்ச ஊழல் நிறைந்த உலக நாடுகளின் வரிசையில் 97வது இடத்தில் இருக்கின்றது. இந் நிலையானது தொடர்கதையாக இருக்கும் எனில் சமுதாய கட்டமைப்பானது மாற்றமடைந்து விடுவதுடன் சட்டம்இ ஒழுங்கு என்பவற்றில் நிலைகுலைவு ஏற்பட்டு உண்மைஇ நேர்மைஇ மனித நேயம் என்பன விலைகொடுத்து வாங்கப்பட்டு விடும். இதனால் தற்போது வறிய மட்டத்தில் வாழ்வோர் மேலும் வறியவர்களாக மாற்றமடைவதுடன் சுரண்டல்களை மேற்கொள்வோர் செல்வந்தர்களாக வாழும் நிலை ஏற்படும். வருங்கால சந்ததியானது இருள்படந்த சூழலுக்குள்ளேயே அடியெடுத்து வைக்கும். எதிர்காலத்தில் வறுமையற்ற சூழலை உருவாக்குவது இனி நம் எல்லோர் கைகளிலுமே... சட்டத்தின் முன்னிலையில் எல்லோரும் சமன் என்று வாழ்ந்து வருவோம்.

ப.ஐஸ்வரியா



# நாட்டைக் கூத்தை நழுவவிடாது காத்து வரும் அண்ணாவியார் ஆனந்தன் அவர்களுடனான ஓர் சந்திப்பு.

அண்ணாவியார் ஆனந்தன் அவர்களின் கம்பீரக்குரலும், அதை மத்தளம் உள்வாங்கிப் பிரசவிக்கும் தாளத்தீர்மானமும், இவைகளுக்கேற்ப கூத்தர்களின் காற் சதங்கையின் கனீர் ஒலியும் என்னை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றன.



அது அண்ணாவியாரின் வீட்டு முற்றம். கூத்தின் பயில்களம்.'நாட்டை' என்றழைக்கப்படும் இந்தக் கூத்து வடிவம் இன்றளவு உயிர் காவுவதும், பேசப்படுமளவுக்கு வீரியத்துடன் எழுந்து நிற்பதும், அந்தக்கிராமத்தில் வாழும் கூத்தர் சமூகத்தின் சமூகப்பண்பாட்டுணர்வும், ஆற்றலும், ஆளுமைமிக்க அண்ணாவியார் ஆனந்தன் என்றழைக்கப்படும் இரத்தினம், சச்சிதானந்தம் என்ற பல்துறை கலைஞனின் பிரசன்னமாகும்.

ஈழத்தமிழர்களின் பாரம்பரியக் கலை வடிவங்களில், வடமராட்சி பருத்தித்துறை திகிரிக் கிராமத்தின் கலைஞர்களால் காத்து வளர்க்கப்பட்டு வரும் 'நாட்டை' என்றழைக்கப்படும் கூத்து வடிவம் வித்தியாசமானது .



ஆற்றுகை செய்யப்படுகின்ற அரங்க (களரி) அமைப்பாலும், ஆடல், ஒப்பனை என்பனவற்றாலும் இந்த மாற்றம் வெளிப்படுத்துகிறது.

'தாம் தீம் தத் தெய்
தக
தாம் தீம் தத் தெய்
தக
தாம் தீம்தத் தெய்யதோதக
தொங்கு தீம் தக தெய்...என்ற

கேள்வி :- உங்களைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவீர்களா?

பதில்:- நான் 1953.11.14 ஆம் திகதி வலிகாமம் காங்கேசன் துறையில் பிறந்தேன். ஆரம்பக்கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும், பின்னர் எனது தந்தையின் ஊரான பருத்தித்துறை திகிரிக்கிராமத்தில் எனது பேரன் அண்ணாவியார் அமரர் வைரமுத்து என்பவருடன் வசித்து வந்ததுடன் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் எனது கல்வியை பத்தாம் வகுப்பு வரை தொடர்நதேன்.

கேள்வி:- நீங்கள் இந்தக் கூத்தைப் பழகுவதற்கு சந்தர்ப்பம் எப்படி கிடைத்தது

பதில்:- 150 வருடங்களுக்கு மேலான ஒரு கலைப்பாரம்பரியத்தைக் கொண்டதாக திகிரிக் கிராமம் இருந்தபடியாலும், எனது பேரன் அமரர் வைரமுத்து, தந்தை அமரர் இரத்தினம், பெரியதந்தை அமரர் தம்பையா, மற்றும் சிவக்கொழுந்து என்பவர்களுடன் சிறிய தந்தை மாமனாரான கலாபூசணம் வ.இராசையா, வடிவேலு என்பவர்கள் நாட்டைக்கூத்து, சிந்துநடைக்கூத்து அண்ணாவிமார்களாகத் திகழ்ந்ததாலும் திரு ஆனந்தன் அவர்கள் 1960 களில் தனது ஏழாவது வயதிலேயே நாட்டைக்கூத்துக்களரிக்குள் உள்வாங்கப்பட்டு ஒரு நாட்டைக் கூத்துக் கலைஞராகத் தயார்ப்படுத்தப்பட்டார்.

கேள்வி:- நீங்கள் என்னென்ன கூத்துகளில் விளையாடியிருக்கிறீர்கள்?

பதில்:- செட்டிவர்த்தகன், சந்திரபூரணி, சித்ரருபன் போன்ற நாட்டிக்கூத்துக்களில் விளையாடியதுடன் காலப்போக்கில் சிந்து நடைக்கூத்துக்களிலும் உள்வாங்கப்பட்டேன்.

கேள்வி:- நீங்கள் என்னென்ன பாத்திரங்களில் விளையாடியிருக்கிறீங்கள்?

பதில்:- காத்தவராயன் சிந்துநடைக்கூத்தில் காத்தான், சின்னான், வைசூரன், நாரதர், சிவன் போன்ற பாத்திரங்களை ஏற்று நடித்ததுடன் ஆரவல்லியில், ஆரவல்லி, வீமன், தருமர் போன்ற கதாபாத்திரங்களிலும், பவளக்கொடி, நல்லதங்காள் போன்ற கூத்துக்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்து கலையுலகில் தனது பாதச் சுவடுகளைப் பதித்து வந்துள்ளேன்.

கேள்வி:- நீங்கள் சுயமாக உங்களுடைய நெறியாள்கையின் கீழ் எத்தனை வயதில் இதைச் செய்யத் தொடங்கினீர்கள்?

பதில்:- எனது பதின்நான்காவது வயதில் எனக்குள் உள்ளிருந்த கலை ஆர்வம் சுயமாகவே கலை உலகை எட்டிப்பார்த்துக் கொண்டது. கலை உலகில் பிரசவிக்கத்தொடங்கியது. பல சமூக சீர்திருத்த, தாளலய நாடகங்களை நானே சுயமாக எழுதியதுடன், வளர்பிறை மன்றம் என்ற ஒன்றை உருவாக்கி அதனுடாக நான் எழுதிய நாடகங்களை நானே நெறிப்படுத்தி மேடை ஏற்றிப் பாராட்டுக்களைப் பெற்றேன்.

கேள்வி:- இந்த நாடகங்களினால் சமூகம் உங்களை எப்படி சுபீகரித்தது?

பதில்:- பல போட்டி மேடைகளில் வெற்றிகளைத் எனதாக்கி பரிசில்களைப் பெற்றதுடன், நடிப்புச்செம்மல், திவான் போன்ற பட்டங்களையும் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டேன்.

கேள்வி:- நீங்கள் நாட்டைக்கூத்து என்று அழைக்கபபடும்சிந்து நடை கூத்துகளில் கால் பதித்த காலம்?

பதில்:- 1967ல் சமூகசீர்திருத்த நாடகங்களின் நெறியாளராக இருந்து கொண்டே 1973ல் சிந்து நடைக்கூத்தின் அண்ணாவியாராகவும் பிரகாசித்தேன். நாட்டைக்கூத்தின் ஆட்டத்தரு, தாளக்கட்டு, ஆடல் வகைகள், தருக்கள்(பாடல்) என்பவற்றை முறையாகப்பயின்று வந்ததினால், எனது சிறிய தந்தை அமரர் சிவக்கொழுந்து, கலாபூஷணம் திரு இராசையா அவர்களின் ஆசியுடன் 1992ல் நாட்டைக்கூத்து அண்ணாவியராக களரிக்குள் பிரவேசித்தேன.

கேள்வி:- அண்ணாவியராய் நீங்கள் வருவதற்கு உங்களிடமிருந்து எவற்றை எதிர்பார்ப்பார்கள்?

பதில்:- குரல்வளம், பாடும் ஆற்றல், ஆடற்திறமை, தாளக்கட்டுக்களின் துல்லியமான உச்சரிப்பு, பிசகாத தாளத்திர்மாணங்கள், உடல் வாகு என்பன என்னை அண்ணாவியார் என்ற தானத்திற்கு இட்டுச்செல்ல வைத்தது.

கேள்வி:- இந்தக் கூத்தை வளர்த்தெடுக்க மேலும் என்ன செய்தீர்கள்?



பதில்:- 'நாட்டை' என்ற கூத்து வடிவத்தை பருத்தித்தறை திகிரிக்கிராமத்தைத் தாண்டி நவீன நாடகக்காரர், நாடக அரங்கியல் ஆசிரியர், மாணவர்கள், கலை இலக்கியக்காரர், பிறகூத்துக்கலைஞர்கள் என பல தரப்பட்ட கலை ஆர்வலர்களுக்கு அறிமுகப்படுத்தியதுடன் 'நாட்டை'யின் முக்கியத்துவத்தையும், வித்தியாசத்தையும் வெளி உலகம் அறியச்செய்தேன்.

கேள்வி:- கூத்தை விட உங்களிடம் இருக்கும் வேறு திறமைகள் பற்றி?

பதில்:- கூத்துக் கலைஞர் மட்டுமல்லாமல் சிறுகதை ஆக்கத்திறன் என்னிடம் உள்ளது. பத்திற்கு மேற்பட்ட சிறுகதைகள் கை எழுத்துப்பிரதியாக உள்ளதுடன், பல கவிதைகளும் உள்ளன.

எனது நான்கு சிறுகதைகளுக்கு பிரதேச மட்டத்தில் சான்றிதழ்கள் கிடைத்துள்ளதுடன் நடிப்புச்செம்மல், திவான், போன்ற பட்டங்களுடன் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார பேரவையால் கலைஞர்கள் வரிசையில் கௌரவிக்கப்பட்டதுடன் கலைப்பரிதிவிருதும் வழங்கப்பட்டது.



கேள்வி:- கல்வி சார்ந்த தங்களின் ஈடுபாடுகள்?

பதில்:- இந்தியா சென்று சினிமா இயக்குநர் தேர்வில் சித்தியடைந்து டிப்ளோமா படம் தொழில்நுட்பம் (D.F.T) இ பட்டம் பெற்றது டன் இலங்கை நாடகமும் அரங்கியலும் AL தேர்வில் B தராதர சான்றிதழ் பெற்றமை இவரின் கலை ஆர்வத்தின் சான்றினைக் காட்டுகின்றது. கரகம், காவடி பழக்குவதிலும் தேர்ச்சிமிக்கவராகத் திகழ்கின்றார் கலைஞர் ஆனந்தன் அவர்கள்.
இவர் கூத்தின் முழுமையான பரிமாணங்களைப் புரிந்தியங்கும் ஆளுமை உள்ளவராகத் திகழ்கின்றார் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

கேள்வி:- உங்களுடைய எழுத்துருக்கள் பத்திரிகைகளில் வந்ததில்லையா?


பதில்:- 'நாட்டை'க்கூத்தைப் பற்றிய இவரின் கட்டுரைகள், பருத்தித்துறை பிரதேச செயலக புதிய கட்டட திறப்பு விழா மலரிலும், வீணை, மல்லிகை போன்றவற்றிலும் இவரின் பிற கட்டுரைகளும், அஞ்சலி சஞ்சிகையில் சிறுகதையும், தினமுரசு பத்திரிகையில் இவரின் கவிதைகளும் வெளிவந்தள்ளன. இவரைப்பற்றிய கட்டுரைகள் வீரகேசரி, தினக்குரல் போன்ற பத்திரிகையில் வெளிவந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. கூத்துக் கலைஞனாக, நடிகனாக அண்ணாவியராக, நவீன நாடக நடிகனாக நெறியாளனாக, கவிதை, கட்டுரை, சிறுகதை புனைபவராக, சினிமா இயக்குநர் சான்று பெற்றவராக, ஒரு புகைப்படக்கலைஞனாக, போட்டி நாடகங்களுக்கு நடுவராக இப்படி பல்கலை முகங்களைக் கொண்ட அண்ணாவியார்.

ஆனந்தன் அவர்களிடம், பாரம்பரிய அரங்க சார்ந்த எதிர்கால உங்கள் கருத்து என்ன? என்று கேட்டேன்.
ஓர சிறு புன்னகையுடன் தொடர்ந்தார்.

அந்தச்சிரிப்பில் உயிர் இல்லை என்றது மட்டும் எனக்குப்புரிந்தது.
கூத்தின் உயிர்ப்பான ஆற்றுகைக்க தொடர்ச்சியான உத்வேகம் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் மோடிக்கூத்துக்களை (நாட்டுக்கூத்து) படச்சட்டமேடைக்காக சரிக் கட்டிக் கொண்டுவருவது நன்றாக இல்லை சற்று நிறுத்திப்பின் தொடர்ந்தார்.
கூத்தின் சூழலுக்கு ஆர்வலர்கள் வரவேண்டும் ஒதுக்கித் தள்ளிவிட்டு படச்சட்ட மேடைக்க கூத்தைக் கொண்டு வந்து பாரம்பரியத்தைத் தேடுவது எப்படி நவீன மயமாக்கல் என்ற சிந்தனை ஒடி சமுதாய அரங்கான கூத்தின் ஆற்றுகையைச் சுரக்கி இயக்க வைப்பது பாரம்பரிய கலை வடிவங்களின் இழப்புக்களுக்க உரியதாகும்.

கேள்வி:- நீங்கள் கூத்துக்கலைஞர்களுக்கு சொல்ல விரும்புவது?

பதில்:- இறுதியாக சில நிமிடங்கள் கண்களை மூடி மௌனமாக இருந்தார். மெல்ல இதயத்தின் உயிர் துடிப்பான வார்த்தைகள் வெளியானது 'நாட்டை' என்ற கூத்துவடிவம். ஈழத் தமிழர்களது பாரம்பரிய அரங்குகளில் தனித்துவமானது. அதை நாம் இழந்து விடமுடியாத. அவ்வாறு இழந்து போவது சமூக அநியாயமாகிவிடும்' என்று மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் கூறி என்னை வழியனுப்பினார்.



கற்கை நகரெனக் கற்றவரும் மற்றவரும் காலமெல்லாம் புகழ்ந்து போற்றும் பெரும்பகுதியே கற்கோவளம். கடலலையும் சவுக்கொலியும் இசை எழுப்ப பளிங்கு போன்ற வெள்ளை மணற்திட்டுக்கள் இயற்கை எழில் கூட்ட, அவ்வெழிலிற்கு ஈடு கொடுத்தாற் போல வெள்ளை மனம் கொண்ட மக்கள் கூட்டமே செறிந்து வாழ்ந்த காலப்பகுதியிலேயே முத்துக்குமார் தங்கம்மா 15.04.1934 ஆண்டு கற்கோவளத்தில் உதித்தவர்தான் இன்று நாடு போற்றும் கலைஞர் கலாபூசணம் மு.தணிகாசலம் அவர்களாவர்.

அமரர் நல்லூர் திருநாவுக்கரசு அவர்கள் வழிகாட்டியாக கிடைக்கப் பெற்றதும் இவரது தவப்பயனாகும்.

இவ்வாறான நிலைமைகளே பிற்காலத்தில் காத்தவராயன் கூத்து அரங்குகளில் நடிகராகவும் பிற்பாடு உடுக்காராராகவும் பக்தி பாவமாக ஆண்டவனுக்கு அடியவர்கள் நிறைவேற்றும் காவடி, கரகம்; கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்வுகளைப் பழக்கியும், உடுக்கடித்து சிந்து பாடும் உயரிய பக்தராகவும், சனசமூக நிலையங்கள், சமூக மேம்பாட்டு அமைப்புக்கள் பாடசாலைகள் போன்றவற்றில் நடைபெறும் கலை நிகழ்வுகளில் நாடகம் பழக்கும் அண்ணாவியாராகவும்; நெறியாள்கையாளராகவும், பாடசாலைக்கீதம், நாட்டார்பாடல்

# கற்கை நகரில் கலைக்குப் பெயர் போன கலைஞன்

## கலாபூசணம் மு.தணிகாசலத்தின்



இவர் சிறு குழந்தையாக இருக்கும் போது இவரது தாயார் இனிமையான முறையில் இசைத்த தாலாட்டுப் பாடல்களும் காத்தவராயன் கூத்துப்பாடல்களுமே பிற்காலத்தில் இவர் நாட்டார் பாடல்களிலும் காத்தவராயன் கூத்திலும் ஈடுபாடு கொள்ளவைத்தது. அவ்வார் இக்கலைத்துறையில் உயர்ந்து விளங்க இவரது தாய் வழிச்சமூகமே அடி நாதமாய் அமைந்திருந்தது. இவரின் தாயாரின் தந்தையார் தம்பையா இராமலிங்கம் என்பவர் கரகம் காவடிப் பாடல்களை பாடும் பாடகராகவும் உடுக்கிசைக் கலைஞர் எனவும் பெயர் பெற்றிருந்தார். இவ்வகையில் கலைஞர் தனது தாயரின் வழி வந்த மாமனார் நிலைப்பர் வீரபாகு கற்கோவளம் வைத்திய கலாநிதியும் ஆசிரியருமான அமரர் கந்தையா என்பவராலேயே வழிநடத்தப்பட்ட மாண்புமிகு கலைஞராவார். இவ்வகையில் தனது ஆரம்பக் கல்வியை கற்கோவளம் மெ.மி.த. கலவன் வித்தியாசாலையில் ஆரம்பித்த காலத்திலேயே கலையுலகில் பிரவேசி இக்கல்லூரியின் சங்கீத ஆசிரியர்



போன்றவற்றைத் தானே ஆக்கம் செய்துஅளிக்கின்ற கவிஞராகவும் திகழ்ந்துள்ளார்.

கலையினூடாகச் சமூகத்திற்குத் தன்னாலான பணியினைச் செய்ய வேண்டும் என்னும் பெரு நோக்கு கொண்ட இலட்சிய வாதி என்றே கூறலாம். உழைப்பை நோக்காகக் கொண்டு கூலிக்கு மாரடிக்கும் போலிக்கலைஞர்களுக்கு மத்தியில் அவர்களுக்கு நேர் மாறாக எதுவித கூலியும் வாங்காது கலையை வளர்த்து வந்துள்ளார்.

இதற்கு கற்கோவளம் மெ.ம.த.க பாடசாலை கீதம் இயற்றியதன் பொருட்டு நாகர் கோவில் மெ.மி.த.க பாடசாலை, வேலாயுதம் மகா வித்தியாலயம், புலோலி அமெரிக்க த.க பாடசாலை, தும்பளை வரத விநாயகர்

ஐக்கிய நாணய சங்கம் போன்ற அமைப்புக்களுக்கு வழங்கிய கீதங்களே தக்க உதாரணங்களுமாகும்.

"நாட்டார் பாடலில் அவருக்கு நிகர் அவரே தான் என்பதற்கு எடுத்துக்காட்டாக 1999ஆம் ஆண்டு பாரம்பரிய கலை மேம்பாட்டுக்கழகம் பாடசாலைகள் கலை மன்றங்கள் தனியார் மட்டத்தில் நடாத்திய போட்டியில் நாட்டார் பாடலில் முதலாம் பரிசும் தாலாட்டுப் பாடலில் மூன்றாம் பரிசும் பெற்று பாராட்டுப்பெற்றார். தமிழ்த் தேசிய விழா பிரதேச மட்டத்தில் 2006 ஆம் ஆண்டு (திறந்த பிரிவிலே தோற்றி) கவிதைக்கு இரண்டாம் இடமும் பாடலுக்கு மூன்றாம் இடமும் பெற்று சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## உடுக்குத்துறை

உடுக்கு அடிக்கும் கலையிலும் இவர் ஓர் உன்னதமான இடத்தை வகித்து வருகின்றார். இவரிடத்தில் இக்கலையை பயின்றவர்கள் ஏராளம். ஆயினும் அக்கலையில் இவரை மிஞ்சியவர் எவரும் இல்லை என்றே கூறலாம். ஏனெனில் இவரது கைவிரல்கள் உடுக்கில் உருளும் விதமும் ஒரு தனிரகம் என்று பலர் வியந்து கூறுவதும் உண்டு.

## நாடகத்துறை

இவர் பற்பல நாடக மன்றங்களிலும் பின்னணிப் பாடகராக இருந்ததன் காரணமாக பற்பல கலைஞர்களை பலபல இடங்களில் உருவாக்கியுள்ளார். இவர் 1966ல் கரவெட்டி நவசக்தி மன்றத்திலும் 1977ல் பொலிகை கிழக்கு இளைஞர் மன்றத்திலும் 1976ல் மயிலிட்டி இளைஞர் நாடக மன்றத்திலும் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தை அரங்கேற்றியுள்ளார். இவர் கலா விநோதன், வில்லிசைப் புலவர் கலாபூசணம், க.கணபதிப் பிள்ளையின் மாதனைக் கலாமன்றத்துடன் இணைந்து முல்லைத்தீவு, திருகோணமலை, மல்லாவி, மன்னார் போன்ற பல்வேறு இடங்களிலும் மேடையேறி பின்னணி பாடியும் நடித்தும் பங்காற்றி உள்ளார். பின்னணி பாடும் துறையில் இவர் ஏராளமான நாடக மேடைகளில் தோன்றி ஆர்வலர்களை தன் வசம் ஈர்த்துள்ள பெருமைக்குரியவர். அத்துடன் 1980 தொடக்கம் இன்றுவரை மாதனைக் கண்ணகி அம்மன் ஆலயத்திருக்கல்யாண விழாவிற்கு கிராமிய மாணவிகளைக் கொண்டு கும்மி, கோலாட்டம், கரகம், நாட்டிய நாடகம் என்பவற்றைத் தொடர்ச்சியாக அரங்கேற்றியும் வருகின்றார்.

இவர் கற்கோவளப் பாடசாலையில் கல்வி கற்கும் பொழுது நன்றாகப் பாடக்கூடிய ஆற்றல் உள்ளவராக காணப்பட்டதனால் தனது பன்னிரண்டாவது வயதில் பாடசாலையில் நடைபெற்ற ஸ்ரீ வள்ளி நாடகத்தில் முருகனாக நடித்ததன் காரணமாகவும் இவரை கலைத்துறையில் ஈடுபட மிகவும் தூண்டியது.


இத்தனைக்கும் இவரது மனைவி அமரர் சரோஜினி தேவியின் ஒத்துழைப்பே பிரதான காரணம் என்கிறார். மேலும் அவரது கலைப்பணியை அராத்தொடர்ச்சியாக மூத்த மைந்தன் ஜெயக்குமார் ஆற்றி வருகின்றார்.. இவரும் பல காத்தவராயன் கூத்து மற்றும் பல சிந்து நடைக் கூத்துகளில் உடுக்கடித்து பாட்டு பாடுபவராகவும், ஆலயங்களில் திருமுறைகளை ஓதுபவராகவும் கலைத்துறையில் ஈடுபாடு உடையவராய் விளங்குகின்றார். அவர் திருமணமாகி சில மாத காலங்களிலே இறந்து விட்டாலும் அது கண்டு துவழ்ந்து தனது பிள்ளைகளை நல்ல நல்வழுறையில் பராமரித்து


ஆளாக்கி சமூகத்தில் நிலை கொள்ளச்செய்தது தனது கலைப் பணிக்கு வீறுநடை போட்டு இன்று கலாபூசண விருது வரை பெற்றிருப்பது வியக்கத் தக்கதுவே.

இது மட்டுமன்றி ஆசிரியர் க.அருளானந்தன் என்பவர் தனது "அரங்க ஆற்றுகைக ளும் ஆய்வு வழிகாட்டியும்" என்ற தனது நூலில் பாடசாலை மாணவர்கள் இடையே நாடக அரங்கினை வளர்த்து வரும் ஆசிரியர்க ளான பா. இரகுவரன், க.அருளானந்தன் மு.தணிகா சலம், மற்றும் இரா. பஞ்ச லிங்கம் என்பவர்கள் வரிசையில் இரா.பஞ்சலிங்கம் என்வர் முதன்மையானவர் என்றும் அவர் கூறுவது அன்னாரின் நாடக துறை யினருக்கு திறமையினை வெளி உலகிற்கு படம் பிடித்து காட்டுகின்றது.

## கவிதை

அன்னார் கவிதை எழுதும் துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். திறந்த பிரிவிலே இடம்பெறும் தமிழ்த்தேசிய விழாக்களிலே கவிதைப்போட்டிகளில் பங்கு பற்றி சான்றிதழ் பெற்ற வராகவும் பல பெரியார் களின் பிரியாவிடையில் கவிதை பாடுபவராகவும் விளங்குவதுடன் தெய்வீக உணர்வு பொருந்திய கவிதைகளை எழுதுவதில் மிக்க பிரியமும் உடையவர் இன்றும் நயினை நாகபூசணி அம்மன், தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான், நல்லூர்கந்தன், வல்விபுர ஆழ்வார் ஆலயங்கள் போன்றவற்றின்





அருட்திறன்களை கவிதை யாக வடிவமைத்து அவற்றை பத்திரிகைகளி லும் பிரகரித்து வருகின்றார்.

கலைஞானம் உள்ளவர்கள் எவருமே தனித்து வாழ நினைப்பதில்லை. அவர்கள் எப்பொழுதும் சமுதாயத் தோடு இணைந்தும் சமுதாயத்திற்கும் சேவை செய்தும் வாழ்வதிலேயே இறைவனை காண்பவர்கள் அந்த வகையில் இவர்கள் சமுதாயத்திற்காக தன்னை அர்பணித்து வாழ்ந்த தியாகி என்று கூறலாம்.

கற்கை நகர் ஆரம்பச் சுகாதார நிலையப் போசகராகவும் புலோ.பல. நோ. கூ. சங்க நெறியா ளராகவும் கிளைக் குழு தலைவராகவும், கற்கோ வளம்.கிராம.அபிவிருத்திச் சபை தலைவராகவும் கற்.மெ.மி.த.க. பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவராகவும் சமூகத்தை நெறிப்படுத்தும் பொருட்டு ஆலயங்களில் கற்கோவளம். ஸ்ரீ. கும். முருகன் ஆலயம், கும்பி மூத்து ஸ்ரீ வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை உறுப்பினராகவும் பல தரப்பட்ட பதவிகளில் காலத்துக்கு காலம் கடமை உணர்வோடு செயற்பட்ட சேவையாளன் என்றே கூறலாம்.

இதுமட்டுமன்றி இவரத கலைப் பணியை கண்டு அதனை உலகறிய செய்யும் பொருட்டு கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சு கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் கலைஞர்களுக்கு வழங்கி கௌரவிக்கும் கலாபூசண விருதினை கலைஞர் மு. தணிகாசலம் அவர்களுக்கு நாட்டுக்கூத்து கவிதை ஆக்கம், கரகம், உடுக்குஅடித்து கதை கூறல் ஆகிய துறைகளில் 40 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்ட து என்ற பெயரில் 2007.12.15 அன்று ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் கலாசார அலுவலக பணிப் பாளர் ஐ.ஆ அபேவர்த்தனா அவர்களால் வழங்கி கௌரவி க்கப்பட்டமையும் மேற்கோள் காட்டி கூற வேண்டி விடய மாகும்.

இவ்வாறான விருதினை பெற்றதையடுத்து வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை இவரை அழைத்து கௌரவித்து விழா நடத்திய மை ஊடாக அவர் சமூகத்த மத்தியில் கொண்டிருந்த நற் பெயரிகைப் பிரதிபலிக்கின்றது.



ஜெ. ஜெகன்

யாழ்ப்பாணச் செயற்திறன் அரங்க இயக்கத்தின் முன்னெடுப்பில் செயற்திறன் அரங்க இயக்குனர் தே.தேவானந்த் தலைமையில் நிகழ்ந்த "நாடக பயிற்சிப் பட்டறையை" பேராசிரியர் அ.மங்கை நிகழ்த்தினார்.

இப் பயிற்சி பட்டறைக்கு பல நாடக ஆய்வாளர்கள் நடுவே நான் நாடகம் சார்ந்த விடயங்கள் எதுவுமே தெரியாதவளாக இக் களத்திலே நின்றேன். நாடகம் என்றால் என்ன என்று தெரியாத நான் இயக்குனர் தே.தேவானந்த் அவர்களின் ஆரம்ப பயிற்சி



# நாடக விறுவிறுப்பின் சுறுசுறுப்பான அனுபவம்

மூலம் எனது நாடக அனுபவமும் எனக்கு கை கொடுத்தது.

சிறுவர் முதல் பெரியோர் வரை விளையாட்டு என்பது யாவர்க்கும் பிடித்த ஒன்று. நான் நினைத்தேன் விளையாட்டை மைதானத்தில் மட்டும்தான் விளையாட முடியும் என்று ஆனால் பேராசிரியர் அ. மங்கை சொன்னார் நாங்கள் எல்லோரும் விளையாடுவோம் வட்டம் கூடுங்கள் என்றார். அப்போதுதான் நான் உணர்ந்தேன் நாடகத்திலும் விளையாட்டுகள் இருக்கு என்று. ஆடும் வீடும், சங்கிலி புங்கிலி ,கைத்தாளம், நொண்டியோ குதிரையோ ஆகிய பல விளையாட்டின் மூலம் எனக்கு சந்தோசம் கிடைத்தது.




சா+பாடு = சாப்பாடு. சாவின் பக்கம் கொண்டு செல்வது சாப்பாடு. நான் விரதத்தின் மத்தியிலும் இந்த பயிற்சி பட்டறையில் இணைந்து கொண்டேன். ஆனால் எனக்கு விரதத்தில் இருக்கிறேன் என்ற ஒரு உணர்வு கூட இருக்கவில்லை. அந்தளவுக்கு பேராசிரியர் அ. மங்கையின் நாடகப் பயிற்சி சிறுபிள்ளைகளுக்கு விளையாட்டு மாதிரி எனக்கு இருந்தது.

விளையாட்டுடன் ஆரம்பமான நாடகப் பயிற்சியில் முகபாவனை உத்தி கையாளப்பட்டது. வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மனநிலையில் காணப்படுவார்கள். இத்தகைய மன நிலையை அரங்கில் போலச் செய்ய முகபாவனை உதவுகிறது. சோகமாக, கோபமாக, விரக்தியாக, மகிழ்ச்சியாக இருந்தால் எப்படி முகத்தை வைத்திருக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன்.

எனக்கு முதல் தடவையாக அப்படி நடிப்பதற்கு வெட்கமாக இருந்தது. பேராசிரியர் அ.மங்கை அவர்களின் நடிப்பதைப்பார்க்க எனக்கும் அவரைப் போல் நடிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு நான் வெட்கத்தை விட்டு நடித்தேன். இந்தப்பயிற்சி மூலம் எனக்கு வெட்கம் என்றால் என்னவென்று தெரியாமலே போய் விட்டது. அந்தளவுக்கு செயற்திறன் அரங்க இயக்கம் எனக்கு நாடகத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து மூன்று நாள் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையில் நாடகத்தில் நாடக பயிற்சியின் போது பேராசிரியர் அ.மங்கை சொன்ன உங்களின் வீட்டிலுள்ள பாவனைக்கு பாவிக்கப்படும் ஏதாவது ஒரு பொருளை நாளைக்கு கொன்டு வர சொன்னார். அப்போது அவர்

எதற்காக பொருட்களைக்கொண்டு வரச்சொல்லுறார் என்று தெரியவில்லை. ஆனால் இதற்கு விடை அடுத்த நாள்தான் எனக்குத்தெரிந்தது.

அடுத்த நாள் நாங்கள் கொண்டு போன பொருட்களை வேறு ஒரு பொருளாகக்கருதி அதைப் பயன்படுத்தி நடித்துக்காட்டச்சொன்னார். அன்று தான் எனக்குத் தெரிந்தது பொருட்களை வைத்து காட்சிகளை உருவாக்கலாம் என்று. எனக்கோ பொருளை வைத்து எப்படி நாடகம் செய்வது என்று தெரியாது. நான் என்னெண்டு செய்யப் போறேன் என்று பயந்து கொண்டிருந்தேன். ஆனால் பேராசிரியர் அவர்கள் ஒரு பொருளை வைத்து இப்படித்தான் நடிக்க வேண்டும் என்று செய்து காட்டினார். அதற்குப் பிறகு எனக்கு பயம் தெளிந்து விட்டது. அது எனக்கு மறக்க முடியாத நாளாக காணப்படுகின்றது. ஒரு பொருளை வைத்து நாடகம் நடிக்கும் முறைமை எனக்கும் தெரியும் என்ற சந்தோசம் ஏற்பட்டது.

நாடகத்தில் காட்சியமைப்பு என்பது பிரதான விடயமாகும். இந்தக்காட்சியமைப்பு ஒவ்வொன்றும் நாடகத்தில் கதை பேசும். அது போல நாங்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்த பொருட்கள் மூலம் ஒவ்வொரு வகையான காட்சியமைப்புக்களை உருவாக்கினோம். இதற்கமைய இரண்டு சொல்லை வைத்து அவற்றை கருவாக்கி அவற்றை நாடகமாக்கி வெளிப்படுத்தலாம். என்பது நாடகப் பிரியர்கள் தொட்டு எனக்கும் அறியப்படாத ஒரு விடயம். அதாவது "சொல்லட்டோ......., வேண்டாம்." என்ற இரண்டு சொற்களை வைத்து எங்களை குழுவாகப்பிரித்து 5 நிமிடத்திற்குள் நடிகச் சொன்னார்

நான் 5 ஆவது குழு, என்னுடன் 6சக நடிகர்கள் இருந்தார்கள். எங்களுக்கு இந்த இரண்டு சொற்களையும் வைத்து எப்படி நடிப்பது என்று தெரியாது பல கோணத்தில் சிந்தித்து குழம்பிய வண்ணம் இருந்தோம். எங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிவடைந்தது.

முதலாவது குழு தங்களுடைய 5நிமிட ஆற்றுகையை நிகழ்த்தினர். விறுவிறுப்பாக போய் கொண்டிருந்த களப்பயிற்சி இடையிலேயே சரிந்து விடுமோ என்று நினைக்கவே முதலாவது குழு தனது அளிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இதைப்பார்த்தவுடன் இப்படித்தான் நடிக்க வேண்டும் என்ற விடயத்தைப்புரிந்து கொண்டேன்

இவ் ஆற்றுகையை கண்டு களித்த யாழ். பல்கலைகழக நாடக விரிவுரையாளர் ரதிதரன் அவர்கள் "ஒரு பயிற்சிப்பட்டறையிலேயே பங்குபற்றுகின்ற அனைவரும் நடிகர்களாக தொழிற்படுவதில்லை. ஆனால் இங்கு நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் பங்கு பற்றிய அனைவருக்கும் நடிகர்களாக தொழிற்பட்டதை இங்குதான் நான் முதல் முதலாக காண்டேன்" என்று அவர் புகழாரம் சூடினார்.

இப் பயிற்சிப்பட்டறையின் இறுதி நாளன்று யாழ்.பல்கலை கழக நாடக விரிவுரையாளர் குழந்தை ம.சண்முகலிங்கம், ரதிதரன் ஈழத்து இசையமைப்பாளர் றொபோட், நெறியாளர்அரசு யாழ். பல்கலைகழக நாடக மாணவர்கள், உதயன் செய்தி ஆசிரியர் தே. பிரேம் நாத் மற்றும் நாடக ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

"உலகமே ஒரு நாடக மேடை அதில் நாமெல்லாம் ஒரு நடிகர்கள்" என்பது மகாகவி வில்லியம் சேக்ஸ்பியர் அன்று கூறி விட்ட கூற்றை நான் வீடு சென்று யோசித்துப் பார்த்தேன் அப்போது புரிந்து கொண்டு ஓ ஓகோ........ அம்மா, அப்பா, கணவன், மனைவி, பிள்ளைகள், அயலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்...... ஆகிய எல்லாமே உலக அரங்கில் பாத்திரங்கள் இவை யாவும் நாடகத்தில் போலச் செய்யப்படுகின்றது.

நாளை நான் என்ன பாத்திரம்? என்ற குறிக்கோளை வைத்து வாழவேண்டும் என்ற தூண்டல், துலங்கல், விளைவு காட்டிகள் ஆகியவற்றை இப் பயிற்சிப்பட்டறையில் அனுபவமாகக் கிடைத்தது. வாழ நினைத்தால் வாழலாம் வழியாய் இல்லை இப் பூமியில் என்ற தாரக மந்திர அனுபவத்தோடு செயற்திறன் அரங்க இயக்குனரும் யாழ். பல்கலைகழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமைய இயக்குனருக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். என் அனுபவத்திற்காய்.





**பா.அனோஜா**

# தைரியமில்லா உள்ளங்களின் முட்டாள் தனமான முடிவு

கொலைக் கலாச்சரத்தினுள் சிக் குண்டிருந்த எமது சமுதாயம் இன்று தற்கொலைக் கலாச்சாரத்தினுள் அமிழ்ந்து வருகின்றது. வீட்டை விட்டு வெளியே வெளியே செல்லும் ஒவ்வொருவரும் மீண்டும் வீடு வந்து சேருவார்களா என்று ஏங்கிக் கொண்டிருந்த ஒவ்வொரு குடும்பங்களும் இன் று தொடர்ச்சியாக அரங்கேறிவரும் தற் கொலைச் சம்பவங்கள் பீதியை ஏற்படுத் தியுள்ளன. முன்பெல்லாம் எப்போதாவது ஒரு நாள் இடம்பெறும் இத் துயரச் சம்பவம் இன் று தினசரி செய்தியாகி விட்டது.


வாழ்க்கையில் மிகவும் உறுதியான சிந்தனை கொண்ட நபர்கள் வாழ்க்கையின் தார்பரியம் பற்றி பேசுபவர்கள் என பல தரப்பினரும் ஒருகணத்தில் இந்த தவறான முடிவுக்கு ஆட் பட்டு விடுகின்றனர். பிரச்சனைக்கு முகங் கொடுக்க முடியாமலே பலரும் தற்கொலைக் கு முயல்கின்றனர். பிரச்சனைக்கு தீர்வு தற் கொலை தான் என்றால் இந்த உலகத்தில் யாரும் வாழ முடியாது.

பிறந்த குழந்தை முதல் இன்றோ அல்லது நாளையோ என்று இறப்பை எதிர் பார்த்திருக்கும் முதியோர் வரை எல்லோருக் குமே ஏதோ பிரச்சனை இருக்கத்தான் இருக் கும். அதை அவர்கள் எப்படியும் சமாளித்து கொண்டு தான் இருக்கிறார்கள்.


பிரச்சனை இன மத மொழி சாதி வேறுபாடுக-ளின்றி அனைவரிடத்திலும் தான் இருக்கின் றது. பிரச்சனையை கண்டு அஞ்சி உயிரை மாய்த்துக் கொள்வதால் தான் பிரச் சனைகளுக்கு தீர்வு எட்டப்பட்டுவிடுமா?


புன்னகையுடன் வாழ்பவர்களிடத்தில் கஸ்டம், சோகம்,ஏக்கம் என்பன இல்லையென்றில்லை தங்களுடைய வாழ்வில் வந்த அல்லது வந்து கொண்டிருக்கின்ற சோகங்களை மனதில் புதைத்து வைத்துவிட்டு உதட்டில் புன்னகையைத் தவழவிடுகின்றனர். மற்ற யோரை சந்தோசப்படுத்துபவர்களும் இன்றயம் இருக்கத்தான் செய்கின்றனர்.

பிரச்சனை இல்லாத உலகில் ஒருவன் பிரச்சினை இன்றி வாழவேண்டும் என்விரும்பி எனின் அவனது வாழ்வு உப்பில்லாதது போன்று ஆகிவிடும.



தற்கொலை செய்து கொள்பவன் உயிர்போகும் நேரத்தில் வலிதாங்க முடியதவர்களாய் ஐயோ தவறான முடிவு எடுத்து விட்டோமோ ஒரு எண்ணமா னது பலரிடத்தில் ஏய்படுவதாக உளவியல் நிபுணர் கள் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு எனில் சுயபுத்தி யையும் மீறி அந்தமுடிவை எடுப்பதற்கான அழுத்தை கொடுக்கும் அளவிற்கு வலியை உள்ளது என்பது மிக முக்கியமான ஒருவிடயமாக உள்ளது. ஒருவர்தனது உயிரை வலிந்து மாய்ப்பது என்பது எப்போதும்நியாப்படுத்தவோ ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முடிவாக அமையாது மன அழுத்தம் குற்றவு ணர்வு ,இயலாமை,குடும்பப்பிரச்சினை காதல்,தோல்வி பொருளாதாரப்பிரச்சினை,பரீட்சைசிக்கல்,இயலாத நோய்கள் வாழ்க்கையில் விரத்தி என பல தற்கொலைகள் செய்து கொள்வோரின் காரணங் களை நாம் பட்டியல் படுத்தமுடியும். குறிப்பாக தற்போது குடும்பப்பிரச்சினைகள் பரீட்சைதோல்விகள் இயலாமை, வாழ்க்கையில் விரத்தி என்பதனாலே தற்போது பெரும்பாலானோர் தற்கொலையை முடிவாக எடுத்து விடுகின்றனர்.






குறிப்பாக அண்மையில் வடமராட்சி நெல்லியடி பகுதியில் இளம் தாய் ஒருவர் எடுத்த விபரீத முடிவால் இன்று அவரது இரு குழந்தைகள் பரிதாபமாய் நிற்பத கான முடிகின்றது. வாழ்க்கையின்ஆரம்பத்தில் காலடி வைத்து சிறிது காலமும்ஆகாதா நிலையில் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனை களுக்கு எதிர் நீச்சல் போட முடியாது இப் பெண் தனது உயிரை மாய்த்துள்ளார்.
சிறகடித்து பறந்து திரியவேண்டிய இருபத்தேழு வயதில் சிறகொடிந்து போய்விட்டார். இப் பெண் முடிவெடுக்கும் அந்த கணத்தில் தனது இரண்டு பிஞ்சுக் குழந்தைகளின் எதிர்காலத்தை பற்றி அவர் ஒரு கணம் சிந்திக்க முற்படவில்லை.

இதனால் தோல்வியையும் ,பின்னடைவையும் வெற்றிக்கான படிகளாக மாற்றி விடவேண்டும். இயலாமை தொடர்பான தாக்கத்தையும் சந்தித்தவர்கள் தற்கொலை முடிவை எடுப்பதைவிட மனதை ஒருநிலைப்படுத்தி அதிலிருந்து வெற்றி கொள்ள முயலவேண்டும்.நாளாந்தம் வெளிவரும் புள்ளி விபரங்களை வைத்து தற்கொலை வீதத்தை கனித்துக் கொண்டு இருக்காது நாம் இந்தச் சமூகத்தில் இருந்து தூக்கியெறிய வேண்டும். எல்லோருடைய கைகளிலும் தோல்விகளின் இயலாமையானதும் விளிம்பில் இருப்போருக்கு ஆதரவு கொடுத்து தடடிக் கொடுத்தும் முடிவை மாற்றியமைக்கவேண்டும்.





ப.ஐஸ்வரியா



# முற்றத்துக் கண்ணாடி முகங்காட்டத் துடிக்குது

வாடி நின்ற பயிருக்கு வான்மழையாக வந்து நின்ற சுவிஸ் நாட்டினுடைய SDC நிறுவனத்தின் வீடமைப்புத் திட்டத்தினருக்கு நன்றி என்று கையெடுத்து தனது கருத்தை ஆரம்பித்தாள் இப் பிரதேச சாதாரணக் கூலித்தொழிலாளி ஜெயராணி "ஒரு சாதாரணக விவசாயியாலேயோ அல்லது கூலித்தொழிலாளியாலேயோ ஒரு வீட்டைக்கட்டுவது என்பது நினைத்துக்கூட பார்க்க முடியாது. இருந்தாலும் நாங்கள் மீளக்குடியேறி சில மாதங்களிலேயே கல்வீட்டில இருக்கிறம். இது நாங்கள் செய்த புண்ணியமே" என்று தனது சந்தோசத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

சொந்தங்களையும் சொந்த இடங்களையும் விட்டு தொலைதூரம் சென்ற உறவுகள் பல சோதனைகளை கடந்த நிலையில் தற்போதே மீளக்குடியேறி வருகின்றார்கள். இவர்கள் காலடி எடுத்து வைக்கின்ற இடங்கள் இன்று வாழத்தகுதியற்றதாக உள்ள போதும் தமது சொந்த இடங்களில் காலடி எடுத்து வைத்த பூரிப்பு இவர்களது துயரங்களை எல்லாம் துகள்களாக மாற்றியமைத்துள்ளது. இவர்களது கடந்த கால வாழ்க்கையின் நினைவுச் சின்னங்களாக இன்று எஞ்சியிருப்பது வீட்டின் சுவர்களும் அத்திவாரங்களுமே. இச் சுவர்களின் பக்கத்தியிலேயே இன்று குடில் போன்ற குடிசைகளை அமைத்து குடியேறி வருகின்றார்கள். இருள் மயமாக இருக்கும் இம் மீள்குடியேற்றங்களின் மத்தியில் இன்று மின்மினிப்பூச்சியாக மாற்றம் பெற்றுள்ள ஒரு பகுதியே மறவன்புலோ பிரதேசம் ஆகும்.தென்மராட்சி- சாவகச்சேரி பகுதியில் இ[illegible] மூன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில அமைந்துள்ள



இப்பகுதியானது 1999 ம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற யுத்தம் இவர்களை அகதிகளாக இடம் பெயர வைத்தது. தற்போது 12 வருடங்களின் பின்னர் 434 குடும்பங்களைச் சேர்ந்த 1602பேர் மீளவும் தமது சொந்த இடங்களில் மீண்டும் மீளக் குடியேறியுள்ளார்கள்.

இக்கிராம மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்னடைவான தொழிலாக விவசாயமும் கூலித் தொழிலுமே காணப்படுகின்ற அதேவேளை இன்று யாழ்ப்பாணத்தில் அதிகளவான விதவைப் பெண்கள் இப் பகுதியிலேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

இப் பகுதியில் யுத்தத்திற்க்கு முன்னர் பல மக்கள் கொட்டில்களிலும் குடிசைகளிலும் ஒரு சிலரே கல்வீடுகளிலும் வசித்து வந்தனர்.





மேலும் இப் பகுதியில் உள்ள சகல கலாவல்லி வித்தியாலயத்தில் உள்ள மாணவர்களில் பலர் தாய தந்தையை இழந்த நிலையில் பல்வேறு பட்ட கஸ்ரங்களின் மத்தியிலேயே கல்வி கற்று வருகின்றனர். மேலும் பல பிள்ளைகளின் பெற்றோர் சாதாரண கூலித் தொழிலாளிகளாகவே காணப்படுகின்றனர். தமது பாடசாலை கல்வி மட்டுமே தம்முடைய எதிர்காலத்தை நிர்ணயிக்க போகின்றது என்ற ஆவலுடன் கஸ்ரங்களையும் பொருட்படுத்தாமல் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். அது போல் இங்கு உள்ள மக்களிடையே பல தயாரங்கள் இழையோடியுள்ள போதும் வெளித் தோற்றத்தில் காணப்படும் கல் வீடுகளே இன்று இவர்களது நிலையை நிர்ணயிப்பதாக உள்ளன.

ஆனால் யுத்தத்தின் பின்னர் வழங்கப்பட்டுள்ள கல் வீடுகள் இவர்களிடையே பெரும் மனச் சந்தோசத்தையும் ஏற்றத் தாழ்வின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. வீடு ஒன்றிற்கு இருக்க வேண்டிய அடிப்படைத்தேவைகள் அனைத்தும் பூரணம் இன்று செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களிடையே இப்படியான சந்தோசம் காணப்பட்டாலும் சில ஏக்கங்களும் தொடருகின்றன. இதன் பிரதிபலிப்பு கடந்த சிலநாட்களாக இப்பிரதேச சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த புகைப்படப் பயிற்சியில் மாணவர்கள் வரைந்த வரைகலைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

ப.ஐஸ்வரியா



விடுவில் இருந்து பல மைல் தூரம் நடந்து செல்லும் இவர்களுக்கு இன்றுவரை எந்த விதமான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட வில்லை. இவர்கள் நாளாந்தம் பயணம் செய்யும் வீதிகளோ இன்றும் குன்றும் குழியுமாகவே உள்ளது. மேலும் இக் கிராமத்தில் பெரும்பாலும் இந்து மக்களே வாழ்கின்றனர்கள். இங்குள்ள இந்து ஆலயங்களோ இன்றும் பாழடைந்த நிலையிலேயே உள்ளது. மறவன்புலவு பல முயற்சிகளின் மத்தியில் மறவன்புலோ சகலகலா வல்லி பாடசாலை மாணவர்கட்க்கு SDC நிறுவனம் வழங்கிய கணனிகள் மாணவர்களது பிஞ்சு விரல்கள் பட முன்பே கயவர்களால் களவாடப்பட்டு சில தினங்களுக்கு முன்பே இது மீளவும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.




# பராமரிப்பு எப்போது




இன்றைய விந்தையான சூழலில் வாழ்ந்து வருகின்ற மானுடன் புதியவற்றைக் கண்டதும் ஏனோ பழையவற்றிற்கு கிட்டேயும் வரமனமில்லாமல் ஓடி ஒழிந்து விடுகின்றான். இதனால் உள்ளூருக்குள் இருக்கின்ற பல உற்பத்திகள் பயன்படாமல் இருப்பதை கண்கூடாக காண முடிகின்றது. இவற்றில் ஒன்று தான் மூலிகைகள். ஆயுள்வேத மருத்துவமனைகளை நாடுபவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் மட்டுமே உள்ளனர்.

மூலிகைகளுக்கு பெயர் போன இடம் தீவகம் என்றால் அதனை மறக்க வாய்ப்பேயில்லை.இதனை இறைவனின் கொடை என நம்புவர்கள் இன்றும் உள்ளனர். இலங்கைத் தீவுக்குள்ளே 7 தீவகற்பங்கள் காணப்பட்டாலும் நெடுந்தீவில் அதிகமான மூலிகைகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் நெடுந்தீவு மக்கள் மூலிகையை மாத்திரமே வைத்து வியாதிகளை தீர்த்து வந்துள்ளனர். 200 மேற்பட்ட மூலிகைகளைக் கொண்டிருந்த இத்தீவுமண்ணில் தற்போது குறைந்தளவு மூலிகையே காணப்படுவதாகவும் இன்னும் சில மூலிகைகள் அழிவு நிலைக்கு குட்டப்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை அடைகின்றனர். இத்தீவு மண்ணில கத்தாளை,நொச்சி, வேம்பு, கிலுகிலுப்பை, வேரில்லாக் கொத்தான், வாய்விளங்க பிரண்டை, எருக்கு, வாதமடக்கி, பாவட்டை, ஒதி, பாலை ஆல், ஆமணக்கு, ஈஞ்சு, மஞ்சவண்ணா, கொவ்வை, முருங்கை, தயிர்வளை, உத்தமாகாணி, இலுப்பு, காக்கணவன், முல்முருக்கு, நரி இலந்தை, வட்டத்துத்தி குறிஞ்சா, தீந்தில், தாளி பனந்தாளி, பிரம்பட்டநார், நாயுருவி, தூதுவளை, புல்லாந்தி, தேங்காய்புக் கீரை, கீழ்க்காய் நெல்லி, சாறணை,சிற்றவரை, வாதநாராணி, ஆடாதோடை,சில்லிக்கொடி ஆவுரி, இயங்கு, குன்றிமணி, விணாலை, மொசுமொசுக்கை, பூரவள்ளி, மணித்தக்காளி, கண்டங்கத்தரி, பிரதமதண்டு, பேராமட்டி, கருவேல், முசுட்டை, விடத்தல், நஞ்சறுப்பான், பசளி, தெவிட்டை, காஞ்சாங்கோரை, வீழி, மாவிலங்கு, காரை, மருதோண்டி, தொய்யில், மிளகுகரணை, செம்முள்ளி, மருது, எலிச்செவியன், நறுவிலி, நாயுருவி, போன்ற பல மூலிகைகள் காணப்படுகின்றன. ஆனால் இவற்றில் பல மூலிகைகள் அழிவடைந்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார். இன்றும் மூலிகையைக் கொண்டு வைத்தியம் செய்து வருகின்ற தர்மலிங்கம் முத்துமலர் எனும் பெண்மணி.



ப.புவிதா



40 வருடங்களுக்கு முன்னர் ஆயுள் வேத அதிகாரிகள் நெடுந்திவுக்கு கராடி யைக் கொண்டு வந்து மூலிகைகளைக் கண்டுபிடித்ததோடு அம் மூலிகைகளை யும் கொண்டு சென்றுள்ளனர்.கராடி எனும் மிருகம் உண்ணுவது கரும்பும், மூலிகையும் மட்டுமே அதனால் தான் அம்மிருகத்தினைக் கொண்டு வந்ததாக இவ்வூரிலுள்ள வயதானவர்கள் தெரிவிக்கின்றனர்.



அது மட்டுமல்லாது இறைவனின் படைப்பு என நம்பும் மக்கள் கூறுகின்ற கதையொன்றை குறிப்பிடுகின்றேன். அதனை நம்புவதும் விடுவதும் உங்க ளைப் பொறுத்தது. இராமாயணம் பற்றி பெரும்பாலானோர் அறிந்திருப் பார்கள்.ஓர் கட்டத்தில் அனுமான் சஞ்சீவி மலையை தூக்கிக் கொண்டு இலங்கையை அடைந்தார் என வர லாறு கூறுகின்றது.அந்த தருணத்தில் அம்மலையின் சிறிய துண்டுகள் பல தவறுதலாக கீழே விழுந்தது.அவ்வாறு விழுந்த பகுதிகளில் கல்லோடு சேர்ந்து விழுந்த ஒரு பகுதியே தான் நெடுந்தி வாம்.அனுமன் தூக்கிச் சென்ற மலை யானது மூலிகை நிறைந்த மலை எனவே தான் தீவகத்தில் மூலிகைகள் நிறையக் காணப்படுவதாக மக்கள் நம் புகின்றனர். அத்தோடு முதலில் பெரிய மலைத்துண்டு விழுந்ததால் உருவான நெடுந்தீவு தீவுக்குள்ளே பெரிய தீவா கவும் எல்லாவகையான மூலிகையும் கிடைக்கக்கூடிய தீவாகவும் காணப்படு கின்றது.

என நடராஜா சரஸ்வதி எனும் வயதான அம்மா குறிப்பிடுகின்றார். சஞ்சீவி மலையின் இருந்ததாக குறிப்பிடப்படும் முக்கியமான மூலிகையான " சஞ்சீவி" எனும் மூலிகை மரம் இன்றும் நெடுந்தீவில் காணப்படு வதும் பெருமைக்குரிய ஓர் விடயமே.

எது எவ்வாறு இருப்பினும், இங்குள்ள மக்கள் முன்னர் மலேரியா, செங்கண்மாரி, விக்கடி, முறிவு நெறிவு, சொறி, சிரங்கு,சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் போன்றவற்றிற்கு அங்குள்ள மூலிகையை வைத்தே வைத்தியம் செய்துள்ளனர்.

முன்னர் மூலிகையைக் கொண்டு நோய் தீர்த்தவர்களில் மதியாப ரணம்,குகநாதன் பொன்னுத் துரை என்பவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இன்று இவர்கள் இல்லாத குறையைத் தீர்ப்பதற் காக பத்திநாதர்ஐயா,முத்துமலர் சுந்தரம் பரியாரியர்,என்பவர் கள் இவ்வைத்தியத்தை முன்னெ டுப்பது ஓரளவு திருப்தி தரும் விடயமாக கருதும் மக்கள்,தமது ஊரில் ஒரு வைத்தியசாலை இருப்பதாகவும் அதுவும் ஒழுங் கினமாகக் காணப்படுவதோடு, போக்குவரத்துப் பிரச்சனை யால் நோய்களைத் தீர்ப்பதற்கு அல்லல்படும் போது இவ் வைத் தியர்கள் தான் உதவுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இன்னொரு சாரார் அழிவடைந்து வருகின்ற மூலிகைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளுமாறும், அங்கே இயங்கி வந்த ஆயுள்வேத மருத்துவமனையை ஒழுங்காக நடாத்துமாறும்,இத்தீ வுக்கென்று நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றனர். மக்களின் விருப்பம் நிறை வேறுமா?அழிவை எதிர்கொண்டிருக்கும் மூலிகைக்கு பாதுகாப்பு கிடைக்குமா?



# நீரின்றி அமையாது உலகு, குருதியின்றி அசையாது உயிர்

தொல்லைகள் நீண்டு தானங்களின் எல்லைகள் சுருங்கிய இத்தருணத்தில் குவலயத்தில் குருதி பற்றி எழுத என் பேனா முனைகின்றது. போரிலே சிந்திய குருதி ஒரு புறம், விபத்திலே சிந்துகின்ற குருதி மறுபுறம் இப்படியே இரத்தம் சிந்தும் முறைமை பழைமையாகிப் போய்விட்ட

இந்தக் காலத்தில் அதிக மானோர் குருதிக்காய் போராடி பல உயிர்களை மீட்கும் பணியில் பலர் ஈடுபட்டு வருகின்றார்கள். காயீனும் ஆபேலும் சகோதர்கள் இருவரும் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தினார்கள். இவர்கள் இருவரின் காணிக்கையில் கடவுள் ஆபேலின்

காணிக்கையை மட்டும்ஏற்றுக்கொண்டார். இதனால் ஆத்திரமடைந்த காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொன்றான் இங்குதான் முதல் முதலாக இரத்தம் சிந்தப்படுகின்றது. இதிலே சிந்திய குருதி படிப்படியாக கத்தியெடுத்து, கல்லெடுத்து,பொல்லெடுத்து, கவண் எடுத்து, துப்பாக்கியிலே செந்நீர் சிந்த உலகம் தன்னையறியாது வளர்த்த கொண்டது.

எகிப்திய மக்கள் பார்வோனின் அடிமையில் சிக்கிக் கொண்டிருந்தனர் இந்நிலையில் மக்கள் பார்வோன் மன்னனுக்கு எதிராக கடவுளிடம் முறையிட அவர் பத்து கொள்ளை நோய்களை அரசனுக்கு கொடுத்தார். கடைசியாக ஓர் இளம் வெள்ளாட்டுக் கடாவின் அல்லது ஓர் இளம் செம்மறி ஆட்டின் இரத்தத்தை தங்கள் வாசல் நிலைகால்களில் தெளிக்கும் படி கடவுள் தம்முடைய மகளிடம் கூறினார். கடவுளின் தூதன் எந்த வீட்டுக் நிலைக்காலில் இரத்தம் காணப்பட்டதோ அந்த வீட்டிலிருந்த எவரையும் அவர் கொல்லவில்லை ஆனால் இரத்தம் இல்லாது இருந்த தலைப்பிள்ளையையும் மிருகங்களில் முதற்பேறானவற்றையும் கொன்றார் இதுதான் பத்தாவது கொள்ளை நோயாகும் இந்த நோயினால் மன்னனும் மனம் மாறினான். உலக

வரலாற்றிலே ஏடுகளில் பொறிக்கப்பட்ட நிகழ்வுகளில் இங்கு மேலே குறிப்பிட்ட இந் நிகழ்விலேயே தான் முதல் முதலாக "இரத்தம்" என்ற பதம் பிரயோகிக்கப்பட்டது.

"பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய பெண் யேசுவிற்குப் பின்னால் வந்து அவருடைய மேல் உடையின் ஓரத்தை தொட்டார். உடனேயே அப்பெண் குணம் பெற்றாள் என்று பைபிளில் குறிப்பிடப்படுகின்றது. இப்படி உலகில் பல்வேறு பட்ட நிகழ்வுகள் பல்வேறு பட்ட நாட்களினை நினைவு கூறப்படுகின்றன.அவற்றில் சில உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றன.அவ்வாறான தினங்களில் ஒன்றே குருதிக் கொடையாளர் தினமாகும்.

2004ஆம் ஆண்டு A,B,O குருதி வகைகளை கண்டறிந்தார் விஞ்ஞானி லான்ஸ்ரைனர் இவரின் யூன் மாதம் 14ஆம் திகதி பிறந்த தினத்தையே இன்று உலக சுகாதார நிறுவனம் குருதிக்கொடையாளர் தினமாக பிரகடனம் செய்ததுள்ளது. அதனால் அன்றிலிருந்து இந்த தினம் அனுஷ்ரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையிலும் 2004ஆம் ஆண்டு கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



**யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி திருமதி தாரணி குருபரன்**

கோதானம், பூதானம், திலதானம், வஸ்திரதானம், அன்னதானம், கன்னியாதானம், வித்தியாதானம், இரத்ததானம் என்று எண் தானங்கள் இருந்தாலும் உயிரைக்காக்கக்கூடிய தானங்களில் சிறந்த தானம் என்றால் இரத்ததானம் ஒன்று தான். இதனால் தான் "இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் பாட்டாங்கில் உள்ளபடி" என்கிறார்கள். தெற்கில் இறப்பதை வடங்கில் இரத்தம் இன்றி இறப்பவர் வீதம் அதிகம் என்று தெற்காசிய அபிவிருத்தி சம்மேளனம் வேதனையுடன் சுட்டிக்காட்டியுள்ளது.

"பருவம் அறிந்து பயிர் செய்,
சிறுகக்கட்டிப் பெருக வாழ்,
சிறுதுளி பெரு வெள்ளம்,
"தாகம் தீர்க்க தேவை தண்ணீர், உயிர்கொண்ட தேகம் காக்க தருவீர் செந்நீர்" என்ற வரிகளை நேசித்த பல மனித நேயக்கரங்கள் தாமாகவே முன் வந்து இவ்வாண்டு குருதி வழங்கியுள்ளார்கள். இவற்றுள் தை மாதத்தில் 144 ஆண்களும் 12 பெண்களும் மாசி மாதத்தில் 171 ஆண்களும் 19 பெண்களும் பங்குனி மாதத்தில் 518ஆண்களும் 25 பெண்களும் சித்திரை மாதத்தில் 118 ஆண்களும் 14 பெண்களும் வைகாசியில் 134 ஆண்களும் 15 பெண்களும் ஆனி மாதத்தில் 134 ஆண்களும் 13 பெண்களும் இதயம் உகந்து யாழ்.போதனா இரத்த வங்கிக்கு தானம் செய்துள்ளனர்.





யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி திருமதி தாரணி குருபரன் அவர்களிடம் இரத்தம் சார்ந்து கேட்ட போது இன்று வன்னி மாவட்டங்களிலிருந்தும் பெருமளவான நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தருகின்றார்கள். இதனால் முன்னரை விட தற்போது குருதியின் தேவை அதிகரித்த போதும் அதனுடைய தேவையை நிவர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இரத்த வங்கி செயற்பட்டு வருகின்றது. இன்றுள்ள நிலைமையில் இரத்ததான கொடையாளர்கள் வளர்ந்து கொண்டு வருகின்றார்கள். இவர்களின் புண்ணியத்தால் இரத்தம் இன்றி உயிர் இழப்போர் என்று சொல்லப்படுகின்ற நிலைமைக்கு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி தள்ளப்படவில்லை. மாணவர்களிடமும் மக்களிடமும் இரத்தம் சார்ந்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்த கவிதை, சிறுகதைப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. அத்தோடு இம்முறை பத்துத்தடவைக்கு மேலே 105 பேரும் 20 தடைவைக்கு மேலே 22 பேரும் குருதி வழங்கியவராவார்கள்.




இவர்கள் மே மாதம் 14 ஆம் திகதி குருதிக் கொடையாளர் தினத்தில் கௌரவிக்கப்பட்டார்கள் என்று ஆனந்தத்துடன் கூறி வழியனுப்பினார்.


உடலிலுள்ள குருதியில் 40 வீதத்திற்கும் அதிகமான குருதியை கருச் சிதைவு, சத்திரச் சிகிச்சை, பிரசவம், டெங்குகாய்ச்சல், குருதி பெருக்கு, உடன் குருதி வெளியேற்றம், பொறி வெடிகள்,அமுக்க வெடிகள், ஏறிகணை வீச்சுக்கள்,துப்பாக்கிச்சூடுகள் வீதி விபத்துக்களில் கடுமையாக குருதியை இழந்தவர்கள் குருதிச் சோகை உள்ளவர்கள், குருதி உறையாமல் கடும் எரி காயங்களுக்கு உட்பட்டவர்கள் குருதி புற்றுநோய், ஆகிய நிலைகளில் உள்ளோர்களே குருதிக்காக தவிக்கின்றார்கள்.

இரத்தம் உயிர் காக்கும் ஒரு உன்னதப் பொருள் கொடுத்தால் மீண்டும் எமது உடலில் இருந்து உற்பத்தியாகக்கூடியது. அவன் இன்றி அணுவும் அசையாது என்பதைப்போல நீர் இன்றி அமையாது உலகு குருதியின்றி அசையாது உயிர் என்ற வார்த்தையை மகுடமாக்கி வாழ்வோம் வழங்குவோம்.

ஜெ.ஜெகன்



# கடலோரு நம் வாழ்க்கை



Print By : Noble printers. 0212220386